

# பெரிய எழுத்து

# மதுரைவீரசுவாமி கதை

ஜீகப்படங்களுடன்

ஆர்.ஜி.பதி
கம்பெனி

உ

புகழேந்திப் புலவர் இயற்றிய

# மதுரைவீரன் கதை

—[படங்களுடன்]—



பிரசுரித்தவர் :

ஆர். ஜி. பதி கம்பெனி,

4, வெங்கட்ராமய்யர் தெரு,

(மின்ட் போஸ்ட்)

இதன் விலை] சென்னை-1. [ரூபா

மதுரை-1

1-50

உ
கடவுள் துணை

# மதுரைவீரசுவாமி கதை

உலகமிசை மன்னுயிர்க டன்னுயி ரெனக்கருதி
ஒருகவிதை நிழலினின்றே
ஒன்னலர் தமைஜெயித் தோங்குசெங் கோலோச்சி
யுயர்காசி நகராளு வோன்
உளமகிழ் திடமதலை யர்யுதித் தாயன்று
'வொல்கு காட்டில் வைகியே
உரகனு லாதரவு பெற்றபின் புன்னுட்டி
லுறைமாதி கன மலையினில்
நில்லெனத் தோன்றியவ னுல்வீர னென்றுபெயர்
நிலையாகவே யடைந்தே
நிருபனும் பொம்மணன் சீமையிற் றவனின்ற
நேரிழை தனைக் கவர்ந்தும்
நிறைபுகழ் பெறும்விஜய ரங்கனெனு மன்னனது
நீள்வாயல் காவல் செய்தும்
நிகரில்பல வளமெய்து மதுரையிற் கள்ளர்தமை
நெஞ்சங் கலங்க மோதி
வலனுயர்ந்தே நல்லகுண பூஷணங்கொ டிருமலை
நாய்க்கனிட மேனியே
மங்கைவெள் ளப்மையைக் கண்டன்பு பூண்டவனை
மருவிடச் சிறை யெடுத்தும்
வதிதவமு மாடகச் சிகரகோ புரமதனில்
வளர்சொக்க நாத ரருகில்
மன்னுமீ னுக்ஷியரு ளினையடைந் தேயும்பர்
வாழ்த்தி மலர்மாரி சொரிய
இலகுமவ் வாலயத் துள்வயங் குங்கனக
வெழில்கம்ப மதில் மேவியே
இப்புவி நிமிர்த்தியாத் தமிருசிகுட் டிச்சாத்த
னேவல்சூன் யத்தி னுடனே
இருமல்கா மாலைகுன் மங்குட்ட மண்டையிடி
யீளைமந் தார காசம்
இவையெல்லாந் தீர்த்திடுந் தெய்வமே யென்முன்
வந்திது தருணமருள் சரணமே.

உ

கடவுள் துணை

# மதுரைவீரசுவாமி கதை

—*—

## காப்பு

துதியும் வீரமுஞ் சொல்லுநல் கீர்த்தியும்
அதிக வித்தையு மாண்மையுந் தானுறும்
மதுரை வீரன்றன் மாகதை வாழ்த்திடக்
கதிர்கொள் சித்தி விநாயகன் காப்பரோ

## பாயிரம்

### வெண்செந்துறை

சித்திவிநாயகர்தஞ் செய்யபதம்போற்று
முத்தியளிக்கு முருகர்பதம்போற்றி
சொக்கர்திருவடியைத் தொழுதுமிகப்போற்றி
தக்கதிருமாலின ருட்டாமரைபோற்றி
அங்கயற்கண்ணம்மை யிளம்பொற்பதம்போற்றி
மங்கையிலக்குமியின் மலர்ப்பாதந்தான்போற்றி
தெள்ளுதமிழாசான் திருவடியைத்தான்போற்றி
வள்ளிதெய்வானை மலர்ப்பாதந்தான்போற்றி
வாணிதிருவடியை வாழ்த்திமிகப்போற்றி
மாணிக்கவாசகர்தம் மன்னுபதம்போற்றி
செப்பரியசம்பந்தர் செம்பொற்பதம்போற்றி
அப்பர்திருவடியை அன்புடனேதான்போற்றி
சுந்தரமூர்த்தியிரு துங்கப்பதம்போற்றி
சொந்தமிகுந்தசில தொண்டரடிபோற்றி
பாண்டிவளநாட்டிற் பானுவைப்போல்விளங்கும்
ஆண்டிகையாமெங்க ளதிவீரன்கதைசொல்வேன்

### நாட்டுச் சிறப்பு

மாதமும்மாரி வழங்கும்வளநாடு
காதமணவீசும் கற்பகஞ்சேர்நன்னாடு
கரும்பின்கணுக்கள்முகத்தைக் காட்டும்மகாநாடு
விரும்பியறம்வளர்க்கு மேலானநன்னாடு
முப்போகமும்விளையு மூத்தோர்வாழ்நன்னாடு

எப்புறமுகங்கை யிலங்குந்திருநாடு
நவதானியம்விளையும் நல்லவளநாடு
தவமறையோர்மாமுனிவர் தங்கும்வளநாடு
தாமரைபொய்கைகளும் தன்மலர்சேர்வாவிகளும்
ஆமையுலாவு மழகானகேணிகளும்
பொன்னுமணிகொழிக்கும் புண்ணியவாறுகளும்
மன்னுந்தாளம் வழங்கியவோடைகளும்
சங்குதவழ்ந்துலவுந் தாழ்வில்லாநஞ்சைகளும்
எங்குமணிவிளையு மெழிலானபுஞ்சைகளும்
பாக்குமரஞ்சோலைகளும் பண்மலர்பூஞ்சோலைகளும்
தேக்குமரக்காவுகளும் செங்கரும்பூஞ்சோலைகளும்
சண்பகப்பூநந்தவனந் தானேமிகுந்தவனம்
விண்ணுலவுதோப்புகளும் வீறுகனித்தோப்புகளும்
மல்லிகைமலர்ப்பந்திகளும் மருக்கொழுந்தின்பந்திகளும்
முல்லைமலர்ப்பந்திகளும் முக்கனிமாப்பந்திகளும்
வானத்தளாவிநிற்க வைத்திடுநெற்பொருளும்
தானங்கொடுக்கவைத்த தாழ்வில்களஞ்சியமும்
காமதேனுக்குநிகர் கணக்கில்லாபால்பசுவுஞ்
சேமமிகுவாடுகளுந் திரளானமாடுகளும்
பசித்தோரிளைப்பாறப் பாங்கானசத்திரமும்
பொசித்தோர்க்குசம்போகம் பொருந்துசிலசத்திரமும்
ஆடையில்லார்க்காடை யளித்துவருஞ்சத்திரமும்
வாடைபனிநீர்புழுகு வழங்கிவருஞ்சத்திரமும்
வேதியற்குவேதம் விளங்கும்மரச்சாலைகளும்
சாதிக்குச்சாதி தங்கமரச்சாலைகளும்
குயிலோசைமிஞ்சுங் குறைவில்லாமாந்தோப்பும்
மயிலாடிநிற்க வாய்த்தபலாத்தோப்பும்
அன்னங்குலாவு மரவிந்தப்பூந்தடமும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வளமானநல்மரமும்
இன்னவளமிகுந்த வெழிற்காசிநன்னாடு
தன்னையுரைக்கச்சேடன் றன்னாலுமாகாதே

மலைவளம்

வாரணிவாசியைச்சூழ் மலைவளத்தைசொல்லுகிறேன்
ஆரணமாமுனிவ ரணியணியாய்த்தவமிருப்பார்
காட்டுப்பசுவுங் கரும்புலியுங்கலந்திருக்கும்

நாட்டுப்பசுவோடு நட்பாய்புலிகுலாவும்
பருந்தும்பைங்கிளியுமொரு பஞ்சரத்திலேவாழும்
பொருந்தரவின்வாயிலெலி புகுந்துபள்ளிகொள்ளும்
பச்சோந்தியும்மயிலும் பட்சமுடன்வாழ்ந்திருக்கும்
கெச்சையும்ஓனுயுஞ் செருக்குடனேகூடிநிற்கும்
சிங்கமும்யானையுஞ் சேர்ந்துவிளையாடிநிற்கும்
பொங்கரவுமந்திகளும் பொருந்தியுறவாயிருக்கும்
இந்தவளமிகுந்த வெழிற்காசிமாமலையைக்
கந்தனதுவாயாலுங் கட்டுரைக்கமிக்கரிதே

நகரச் சிறப்பு

காசினியோர்வாழுங் காசியெனுமாநகரந்
தேசமிகுந்திலங்குந் தெய்வீகமாநகரம்
செம்பொன்மதில்சூழ்ந்த சிங்காரமாநகரம்
அம்பொன்னுல்மாடகூட மமைந்திருக்குமாகநகரம்
கோபுரமெங்குங் குலவுந்திருநகரம்
மாபுரமன்னர்மன்னர் மன்னுத்திருநகரம்
யானைக்கட்டிவாழுமுடி யரசர்வாழ்வீதிகளும்
சேனைத்தலைவர்பலர் சேர்ந்துவாழ்வீதிகளும்
வேந்தர்க்குக்கோல்கொடுக்கும் வேளாளர்வீதிகளும்
சாந்துசவ்வாதுபன்னீர் தான்விற்போர்வீதிகளும்
சாதகந்தான்குறிக்குஞ் சாஸ்திரிமார்வீதிகளும்
கோலமணிவிளக்குங் குச்சிலியர்வீதிகளும்
வேலைப்பழிக்கும்விழி வேசியர்வாழ்வீதிகளும்
கோடிகுதிரையணி குறித்திருக்குஞ்சாலைகளும்
ஆடவருங்குதிரை யணியிருக்குஞ்சாலைகளும்
கடையுங்கடைத்தெருவுங் கனமானமாடங்களும்
கோடைதருஞ்செம்பொன் கொட்டிவைத்தகூடங்களும்
வீதிக்குவீதி விளங்கும்சிவாலயமும்
நீதிவழுவாத நெறிமன்னராலயமும்
மன்னர்க்குநன்மதிசொல் மந்திரிமார்மாளிகையும்
அன்னங்கொடையளிக்கும் அழகானமாளிகையும்
ஏழுநிலைமாடங்களு மெழிலானகூடங்களும்
தாழுமகழிகளுந் தங்கத்தாற்கோட்டைகளும்
போர்வீரரெப்புறமும் புடைசூழுங்காவல்களும்

தேர்வீரர்வாள்வீரர் திக்கெட்டும்காவல்களும்
வாளுரையில்வையாத வலுவீரர்காவல்களும்
தோள்கொட்டிதட்டிநிற்குந் துடிசூரர்காவல்களும்
கற்பில்வழுவாத கன்னியர்கூட்டங்களும்
அன்பிற்குறையாத அடியார்கள்கூட்டங்களும்
சன்மார்க்கர்நீங்காக சற்குணர்கள்கூட்டங்களும்
துன்மார்க்கமில்லாத துரைமக்கள்கூட்டங்களும்
பந்துமுலைமாதர்பலர் பந்தடிக்குமேடைகளும்
இந்துநுதற்பெண்கூடி யிளைப்பாறுமேடைகளும்
கல்விபயிலுங் கனமானசங்கங்களும்
செல்வர்மகிழ்ந்து செருக்குநற்சங்கங்களும்
மூலைக்குமூலை முத்துகளஞ்சியமும்
சாலைக்குச்சாலை தங்கக்களஞ்சியமும்
வீடுகளெங்கும் விளக்குந்திருமணமும்
நாடுஞ்சிறுவர்கட்கு நல்லதிருமணமும்
மாணிக்கத்தாலிழைத்த மன்னர்மணிமண்டபமும்
ஆணிபொன்னாலமைத்த ஆஸ்தானமண்டபமும்
செண்டுமுலையாராடுந் தெய்வத்திருச்சபையும்
வெண்டுவிழுயாராடும் மன்னர்திருச்சபையும்
அன்னமயிலாடு மழகானஇல்லங்களு
வன்னக்கிளிகள்கொஞ்சும் வாகானஇல்லங்களும்
போர்த்தொழிற்கற்கமன்னர் புரிந்திடநல்லிடமும்
எல்லாவளமு மிசைந்ததிருக்காசிநகர்
வல்லாண்மைமன்னர்பலர் வந்துபணியும்நகர்
இந்ததிருநகரி லென்றும்வரன்முறையாய்த்
தன்னந்தனியே தனிசெங்கோல்தான்செலுத்தும்
மன்னும்பொறுமையாலே வண்பூமிக்கொப்பானோன்
கன்னல்வில்லைமாறனைப்போற் கட்டழகுதனையுடையோன்
சொன்னமொழிதவறுன் சொல்லரிச்சந்திரனானோன்
கன்னன்கொடைமாறக் கனகமளித்திடுவோன்
மன்னுயவன்பேரிலே வள்ளிமணவாளனெப்பான்
சொல்லுமனுநீதியிலே தூயதசராஜனையான்
தொல்லுலகையாளும் துளசிமகாராஜன்
மங்காதுநீதிநெறி மானிலத்தைமோர்குடைக்கீழ்
செங்கோல்செலுத்திச் செயம்பெற்றுவாழ்நாளில்


## அரசிருக்கை

சொல்லமைச்சர்சூழ்ந்துவரத் துளசிமகாராஜன்
வல்லமுடிதரித்து மனுசெங்கோல்கைபிடித்து
ஆலவட்டஞ்சாமரைக லணியணியாய்வீசிவர
கோலமுள்ளமாதர்நிறை கும்பமெடுத்துவர
ஆலாத்திதீப மரிவைமார் தாங்கிவரச்
சீலமறையோர்கள் செயவாழ்த்துக்கூறிவர
கன்னியர்களாடிவரத் கணிகைமார்பாடிவர
மன்னர்படைநெருங்க மற்றுமுள்ளோர்தாநெருங்க
வட்டக்குடை பிடிக்க வாள்வீரர்கைபிடிக்க
பட்டுக்கொடைபிடிக்க பலவிருதுதான்பிடிக்க
பற்பலவாத்தியங்கள் பறைவைபோற்சத்தத்துடன்
சொற்புலவோர்நாற்கவியுஞ் சொல்லித்துதித்துநிற்கச்
சின்னங்களெல்லாஞ் சிறப்பாய்பிடித்துநிற்க
மன்னியநாற்சேனை வகைவகையாய்சூழ்ந்துநிற்க
அட்டசிங்கந்தாங்கு மாஸ்தானமண்டபத்தில்
பட்டமன்னரோடு பண்பாய்கொலுவிருந்தான்
மண்டலத்தைத்தான்மதிக்கு மன்னன்மணிமுடிதான்
கடலெல்லாந்தான்மதிக்குங் காதலன்றன்கணையாழி
வாகுவலயமுந்தான் வானுலகந்தான்மதிக்குஞ்
சேகுவயிரமணி செகத்தைவிலைமதிக்கும்
மார்பிற்பதக்கநிறை மதியொளியைமாற்றிவிடுஞ்
சோர்விலொளிபணிகள் சூரியனைத்தோற்கடிக்கும்
இந்தவகைபணிக ளிட்டிருக்குமன்னவன்முன்
பந்தமொடுதேசமன்னர் பகுதிகொடுத்துநிற்க
கட்டியர்களெச்சரிக்கை கைகட்டிகூறிநிற்க
நட்டுவர்பின்மாதர்பலர் நாட்டியங்கள்செய்துநிற்க
வெள்ளைத்தடிக்காரர் விதவிதாய்வந்துநிற்க
துள்ளும்படைவீரர் துடிப்புடனேவந்துநிற்க
சேனைத்தலைவரெல்லாந் திறமுடனேசேர்ந்துநிற்க
யானைத்தலைவரெல்லா மஞ்சலொடுசேர்ந்துநிற்க
தையலர்கள்சங்கீதந் தான்பாடிமுன்புநிற்க
மங்களவாழ்த்துநிறை மங்கிலியர்வாழ்த்திநிற்க
சங்கையில்லாமல்பொன் தானங்கொடுத்துநிற்க
எங்களரசனு மிருக்குமந்தவேளையிலே

பொங்கமுடனவ்வரசன் புத்திரனில்லாமையினல்
வேதாந்தவேதியரை வேதப்பிராமணரை
சாதகரைமற்றுமுள்ள சாஸ்திரத்தில்வல்லவரை
பார்த்தேயொருவார்த்தை பார்த்தீபர்சொல்லலுற்ருர்
கீர்த்திபெற்றவிற்பனரே கேள்வியினில்வல்லவரே
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவரே
மறுவில்லாவென்குடிக்கு மைந்தனில்லாமையினல்
சிந்தைதளர்ந்து திகில்கொண்டேன்பலநாளும்
எந்தவழியும்பிள்ளை யிசைந்தவழிசொல்வீரென்று
பூதலமராளுங்காசிப் பூபாலன்சொன்னவுடன்
வேதப்பிராமணர் விற்பனர்கள்சொல்லலுற்ருர்
அட்டதிக்காளும் அரசர்சிரோன்மணியே
பட்டந்தனக்குப்பிள்ளை பண்பாகவேண்டுமென்ருல்
காசிநதியாடிக் கருதுமுக்காலையிலும்
ஈசன்விசுவநாத லெழிலானசந்நதிக்குள்
சென்றுஅபிஷேகமுதல் செய்வித்துபின்சிவனை
என்றுவணங்கியார்க்கு மெண்ணுன்குதர்மஞ்செய்யில்
அவனியொருகுடைக்கீ ழானமகன்பிறப்பான்
சிவனருளாலேயுமக்குச் செல்வம்பிறக்குமென்ருர்
சாஸ்திரிமார்கள்சொன்ன சன்மார்க்கச்சொற்கேட்ட
மாத்திரந்தீர்த்தமாட மன்னெழுந்திருந்தான்

### *தீர்த்த மகிமை*

கன்மவினைகளெல்லாங் கட்டறுக்குங்காசிநதி
தருமஞ்செய்தோர்க்குமுத்தி தானளிக்குங்காசிநதி
பிள்ளையில்லாதவர்மூழ்கிற் பிறப்பிக்குங்காசிநதி
அரிக்குமொருபதவி யளித்திட்டகாசிநதி
அந்தவினத்தோடு மனவில்சனத்தோடும்
வந்துகற்கெங்கைதனில் மனைவிகரம்பிடித்து
சிந்தைமகிழ்ந்துதிவ்விய தீர்த்தத்திலாடியபின்
பல்லாயிரங்கோடி பார்ப்பனர்க்குத்தானஞ்செய்ய
இல்லார்பல்லோர்க்குத்தான் ஏகமாய்ச்செய்தபின்பு
காசிவிசுவநாதன் கனகோபுரங்கண்டு
ஆடையுடன்வணங்கி யக்கோயில்நாடிமன்னன்.
மன்னர்புடை சூழ மந்திரிமார்தான்தாழ
சந்நிதிவீதியிலே தார்வேந்தன்வந்தபின்பு



அண்டத்தளாவும்பல வானபொற்கோபுரமும்
எண்டிசையுங்காண இலங்குந்திருமதிலும்
சொற்கத்தளாவிநிற்குந் துவசமணித்தம்பங்களும்
கற்களிழைத்திலங்கு கனமானஸ்தூபிகளும்
எங்குஞ்சிவாலயமு மெழிலானலிங்கங்களும்
தங்கத்தாற்போட்டிருக்கும் தளவரிசைசித்திரமும்
மூலைக்குமூலை முத்தால்விளக்குகளும்
சாலைக்குச்சாலை தங்கவிளக்குகளும்
தேர்விளக்குஞ்சீர்விளக்குந் திருவாட்சிநல்விளக்கும்
பார்விளக்குகோபுரத்திற் பதித்தவிளக்குகளும்
சொல்லுநவமணிகள் சொலிக்கும்விளக்குகளும்
இல்லாவிளக்குமிந்த மீரேழுலகிலில்லை
அல்லும்பகலும் அறுத்தெறியுஞ்சந்நதியில்
வாழுமறையவர்கள் வரிசையெடுத்துபலர்
சூழும்படியரசன் சமுகம்வந்துமேவாழ்த்தி
அந்தமறையோர்க ளரசனைக்கோயிலுள்ளே
சிந்தைமகிழ்ந்துதவஞ் செய்யச்சிவலிங்கமுன்னே
கொண்டுவிடுத்தபின்னர் கொற்றவனுங்கைகுவித்து
தொண்டுபுரிந்துசிவன் துங்கவடிதொழுதான்

## மூர்த்தி மகிமை

கண்டார்தமக்குமுத்தி யளித்தருளுங்காசிநதி
தொண்டுபுரிந்தோர்க்குச் சொர்க்கங்கொடுக்குலிங்கம்
க்ஷேத்திரத்திற்சேர்ந்தோர்க்கு சிவலோகமீயுலிங்கம்
தோத்தரித்தபேர்களுக்கு சூழ்வினைநீங்குலிங்கம்
வேண்டும்வரங்களெல்லாம் விரும்பிக்கொடுத்தலிங்கம்
யாண்டும்பிறவாத்தன்மை யார்க்குங்கொடுத்தலிங்கம்
எந்தத்தலத்து மிணையில்லாப்படுகலிங்கம்
இந்தத்தலத்துமேன்மை எய்தும்விசுவலிங்கம்
தன்னைப்பணிந்தரசன் சூழ்ந்து அடிவணங்கி
எந்தனுக்குப்பிள்ளை ஈந்தருள்செய்யுமென்று
பூசைநைவேத்தியங்கள் புரிவித்துநல்லிசைகள்
ஆசையுடன்பாடி யானந்தக்கூத்தாடிக்
காவலரண்மனைக்குள் காவலனும்போய்புகுந்து
ஆவலுடனேஅன்ன மருந்திக்கொலுவிருந்து

### அரசன் முப்பத்திரண்டறமுஞ் செய்தல்

மந்திரிமார்களைத்தான் வகைவகையாய்வரவழைத்து
தந்திரிமார்களையே தந்திரமாய்வரவழைத்து
வேதியர்கள்சொன்ன விதிப்படிக்குத்தருமஞ்செய்ய
நீதிமன்னர்பக்கலிலே நின்றவரைப்பார்த்துரைப்பான்
அடிக்கடிநன்மதிசொல் லமைச்சர்களேகேளுங்கள்
படிக்குள்விளங்குகின்ற பலமானதானமெல்லாம்
என்பெயராலட்டதிக்கு மெழில்பெறவேசெய்வீரென
நன்மதிசேர்மந்திரிமார் நராதிபனார்சொற்கேட்டு
திக்குக்குத்திக்கு திரளானசமுத்திரமும்
தொக்கவுலகமெங்குஞ் சொல்லரியவாவிகளும்
மண்டலமெங்கும் வகைவகையாய்கோவில்களும்
கண்டங்களொன்பதிலுங் கனத்தமடந்தடமும்
கட்டுவித்தார்காசிநகர் காவலன்றன்சொற்படிக்கு
பட்டத்தரசரெல்லாம் பார்த்துமனமகிழ
கோடிப்பிராமணர்க்குக் கொடுத்தான்செம்பொன்கோடி
தேடிப்பலதருமஞ் செய்துவிட்டான்தேர்விஜயன்
கன்னிகாதானம் கணக்கில்ஒருகோடி
அன்னமிடுதான மடுவில்பலகோடி
பூதானம்வேதியர்க்குப் போற்றும்பலகோடி
கோதானமந்தணர்க்குக் கொடுத்தான்பலகோடி
நீர்ப்பந்தல்பூமியெங்கு நிகரில்பலகோடி
மோர்ப்பந்தல்புவியில் மொழியிற்பல்கோடி
அரவைப்பிணைஞ்சுடுதல அதுவும்பலகோடி
பறவைச்சிறைவிடுதல் பாரிற்பலகோடி
கண்ணுடிகாதோலை கண்மருந்துபெண்போகம்
வண்ணுெடுசுண்ண மயிரின்சிறைகளைதல்
விளங்கிற்குணவு விலைகொடுத்தேயுயிர்காத்தல்
துலங்குமகப்பால்கொடுத்தல் சோலைச்சிறைசோறிடுதல்
தின்பண்டநல்கல் சேய்வர்த்தலையமிடல்
வன்கல்வியோர்க்குணவு வாய்த்தபசுவிற்குப்புல்
இந்தவகைத்தரும் மிறைவன்கொடுத்தபின்பு
அந்தமுடன்சிவனை யரசன்மனைவியொடும்
சந்ததமுகாசில்வாழ் சங்கரனைத்தானேக்கிச்
சிந்தைமகிழ்ந்து செய்தார்பலவிரதம்

அந்தவகையறிந்தே யாதிசிவனன்போடு
சந்தானங்காசிமன்னன் தன்மனைவிக்கேகொடுத்தார்

### மதுரைவீரசுவாமி உற்பத்தி

மேகந்தனைபழிக்கு மெல்லியநற்கூந்தலினள்
தோகைமயிலைப்பழிக்குப் சொல்லரியசாயலினள்
சந்திரனுங்கண்டு தயங்குந்திருமுகத்தாள்
இந்திரருக்கொப்பாக விளங்குமழகுடையாள்
அன்னந்தனைப்பழிக்கு மசைந்ததிருநடையாள்
மின்னலைப்பழிக்கு மேகலைப்பூணுடையாள்
பம்பரத்தைத்தான்பழிக்கும் பணைத்தவிளமுலையாள்
செம்பொற்சரிகை சிறக்குமெழிற்கலையாள்
அம்புவிழிமேலே யார்ந்தபுருவச்சிலையாள்
கம்பவாழத்தொடையாள் கற்புமிகுநிலையாள்
துளசிமகாராஜனுக்குச் சொல்லுமுயிர்த்துணையாள்
வளமிகுந்தகற்பூர வல்லிதிருவயிற்றில்
மங்கையணிசிவனருளால் கருத்திரண்டகாலையிலே
மங்கைக்கரசி மதிமயக்கமானாள்காண்
மூன்றானதிங்களிலே முலைகறுத்துமுகம்வெளுத்தாள்
தோன்றும்மயக்கமுகத் தோற்றமுடிவாடிநின்றாள்
நான்கானதிங்களிலே பின்மசக்கைகொண்டாள்காண்
தேன்கதலிமாவருக்கை தித்திப்பிலிச்சைக்கொண்டாள்
ஐந்தானதிங்களிலே யைம்பொன்போல்மேனிகொண்டாள்
சிந்தாகுலமிகுத்துச் சிந்தைமிகத்தளர்ந்தாள்
ஆறானதிங்களிலே அடிவயிறுதான்தளர்ந்தாள்
வீறானவேழுதிங்கள் மெல்லியிடைசிறுத்தாள்
எட்டானதிங்களிலே யெண்ணுதுமெண்ணிநின்றாள்
ஒட்டுமொன்பான்திங்களிலே யுறக்கமிகவிடுத்தாள்
பத்தானதிங்களிலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
முந்தானவாய்திறந்து முதல்மகனுந்தானமுதான்
ஆயிரங்கோடி அழகுள்ளசூரியன்போல்
மாயிருஞாலத்தில் வாய்க்காதரத்தினம்போல்
தங்கத்தைக்காய்ச்சித் தரையில்கவிழ்த்ததுபோல்
ஒருகோடிசூரியரை யுருக்கிக்கவிழ்த்ததுபோல்
இருகோடிசந்திரரை யெடுத்துக்கவிழ்த்ததுபோல்
கோடிமதனுருக் கொண்டுதிரண்டதுபோல்

நீடியபூமியிலே நிருபன்பிறந்தவுடன்
தேவாதிதேவரெல்லாந் தேன்மாரிதான்பொழிந்தார்
பூவுலகமெல்லாம் பூமாரிதான்பொழிந்தார்
அந்தரதுதுந்துமிக ளெந்துமுழங்கிவிட்டார்
இந்திரன்வானவர்க ளெல்லோரும்வாழ்த்தலுற்ருர்
மண்டபத்திலுள்ளவர்கள் மங்களவாழ்த்துரைத்தார்
விண்டலத்திலுள்ளவர்கள் விதவிதமாய்வாழ்த்திநின்ருர்
பாலகனைப்பாரிலுள்ளோர் பலரும்வந்துபார்த்தார்கள்
கொடிசுற்றிதான்பிறந்த குழந்தைதனைபார்த்தார்கள்
துடியிடை யார்தோழிமார் துரிதமுடனேடிவந்து
தொல்லுலகையாண்டவருந் துளசிமகாராசன்முன்பு
வல்லகரங்குவித்து வாழியென்றுவாழ்த்தலுற்ருர்
எங்கள்குலதெய்வமே யிறைவரேநீர்கேளீர்
மங்காதசெல்வமுள்ள மன்னவரேநீர்கேளீர்
திக்கெல்லாமாளவொரு செல்வனுர்தாம்பிறந்தார்
மிக்கவடிவுடைய வேந்தனுர்தாம்பிறந்தார்
பிள்ளைகலிதீர்க்கப் பேரரசர்தாம்பிறந்தார்
வெள்ளலேயிவ்வடிவாய் மாநிலத்திற்ருன்பிறந்தார்
மாதர்தமைமயக்கும் மன்மதனுர்தான்பிறந்தார்
காதல்மிகவளிக்குங் கட்டழகர்தான்பிறந்தார்
பிறந்ததிலேயாதும் பிசகில்லையெம்மரசே
சிறந்தமகன்பிறப்பிற்றீங் கொன்றுண்டெம்மரசே
மாலேச்சுற்றித்தான்பிறந்தால் மாமனுக்காகாதென்பார்
சாலப்பெருங்குற்றந் தாரணியோர்சொல்வார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்தால் குலத்துக்காகாதென்பார்
வடிவுபெறுவதற்கு மற்றகுறைவில்லையே
என்றந்ததாதியர்க ளெடுத்துமேசொன்னவுடன்
குன்றனையதோள்நிமிர்ந்து கொற்றவனுர்தான்மகிழ்ந்தார்
பிள்ளைபிறந்ததென்று பேரரசர்தான்களித்தார்
கொள்ளைகொடுத்தார் குறைவில்களஞ்சியங்கள்
சீனிச்சருக்கரையை திக்கெட்டுவழங்கிவிட்டார்
மானிலத்தில்பின்னே மனமகிழ்வாய்பிரித்துவிட்டார்
அந்தப்புரத்தி லரசரெழுந்தருளிச்
சந்தமுள்ளதாதியரைத் தானழைத்துத்தன்மகனை
எடுத்துவரவேயிறைவர் திருவாக்களித்தார்
அடுத்திருந்ததாதியர்க ளப்பொழுதேகொண்டுவந்து

மன்னவர்முன்பாக வைத்தார்பூந்தொட்டிலுள்ளே
சின்னக்குழந்தை திருமுகத்தைத்தான்பார்த்து
என்றுமடையாத வெக்களிப்புத்தானடைந்து
நின்றுமகிழ்ந்து நெடுநேரந்தான்பார்த்துக்
கொண்டுபோமென்று கொலுவிலாசன்வந்து
மண்டலத்தையாளும்வல்ல மந்திரியைத்தானழைத்து
சோதிடத்தில்வல்லவரை சுருக்கிலழையுமென்றார்
நீதித்தவருவமைச்ச னிருபனுர்சொற்படிக்கு
சோதிடரைத்தானழைத்தான் சோதிடருமோடிவந்து
ஆசியுரைத்துமஞ்ச ளட்சதைவேந்தர்க்களித்தார்
மன்னன்மணியாசனத்தை மறையோர்க்குத்தான்கொடுத்தார்
என்னையழைத்தவித மென்னென்றார்சோதிடரும்
அந்தமொழிகேட்டே யரசன்விளம்பலுற்றான்
வெள்ளிக்கிழமைதனில் விடிந்துபத்துநாழிகையில்
வள்ளலகழுத்திலே மாலைசுற்றிதான்பிறந்தான்
திதிகரணம்வாரஞ் சிறந்தயோகமிவைநாள்
தியறிந்துபஞ்சாங்கஞ் சாஸ்திரத்தைப்பாருமென்றார்
அப்படியேசோதிடநூ லந்தணர்தான்பார்த்து
செப்பருநாலுதிங்கள் திதிவாரந்தீங்கெனவே
சோதித்தறிந்தபின்பு துளசிமகாராஜனும்
போதிக்கச்சோதிடரும் பேசத்தொடங்கலுற்றார்
திக்கெட்டுங்கீர்த்தி செலுத்துஞ்செங்கோல்வேந்தே
தக்கதவம்புரிந்து தான்பெற்றபிள்ளையது
சனனமெடுத்ததினந் தாரணிக்கேயாகாது
கனமான பொல்லாங்கு காசிநகர்க்கெய்துவிடும்
நாளுங்கோளும்பிறந்த நாட்டுக்கேயாகாது
மீளும்பெரும்போரு மிகச்சிறியபிள்ளையினுல்
குழந்தையைவைத்திருந்தால் கோத்திரத்திற்காகாது
இழந்திடுவீர்நாடுநக ரிக்குழந்தைதன்னுலே
அருமகனை வைத்திருந்தா லரண்மனைகள்வெந்துவிடும்
திருமகனைவைத்திருந்தால் தேசமெல்லாம்வெந்துவிடும்
என்றுமிகவுரைத்தா ரெழிலானசோதிடரும்
குன்றிவயறெரிந்து கோபமிகக்கொண்டரசன்
அந்தமொழிகேட்டே யடித்தலறித்தான்விழுந்தார்
சிந்தைதளர்ந்து தியங்கிமதிமயங்கி
அப்பாமகனேயென் றபயமிட்டுத்தான்புலம்பி

எப்படி என்செய்வே னினிபிழைக்கேனென்றுசொல்லி
துங்கவுலகாளுந் துளசிமகாராஜர்
அங்கம்வியர்த்தே யவனிதனிற்புரண்டு
வாயிலேமண்ணை வாரியடித்தார்காண்
கோயிலிற்றெய்வமெல்லாங் குறித்துமிகவைதார்காண்
பேச்சுமூச்சில்லாமற் பிணம்போலுமானார்காண்
பூச்சக்கிரமாளும் புகழ்காசிமன்னவனார்
மந்திரிமார்களெல்லா மனதுமிகக்கலங்கி
அந்தவரச னருகிற்சென்றேயெழுந்து
சுக்குப்பொடிகாதிற் சொரிந்துவாயாலூதி
திக்காளுமன்னவரைத் தெளிந்துவிடச்செய்தார்கள்
சோகமதுதீர்ந்து துளசிமகாராஜர்
தாகந்தெளிந்துமவர் தனியேயெழுந்திருந்து
கோடிதருமஞ்செய்துங் கொடும்பாவியானேனென்றார்
நாடித்தவம்புரிந்து நான்பாவியானேனென்றார்
முற்பிறப்பிற்செய்தவினை மூண்டதென்றாரிப்பிறப்பில்
நற்பிள்ளைதன்னையினி நான்செய்வதென்னவென்றார்
வந்திருந்துசோதிடர்கள் மன்னவரைத்தான்பார்த்து
இந்தமகனையினி யிங்குவைக்கலாகாது
எந்தவிதமும்பிறர்க் கீந்திடுதலுத்தமமாம்
அந்தவிதமன்றிக் காட்டகத்தில்விடல்மத்திபமாம்
என்றுமுறையே யெடுத்துரைத்தானிவ்வசனத்தை
குன்றனையதோள்வேந்தர் கோவென்றழுதுவிம்மி
ஐயையோதெய்வமே யடாதமொழிகேட்டேன்
உய்யும்வகையறியே னேகோகோவென்னசெய்வேன்
இந்தபிள்ளையைகொடுக்க எவர்க்குமனந்துணியாதே
பிறந்தபிள்ளையைக்கொடுக்க பேருலகிற்றுணிவாரோ
உயிரோடுபிள்ளைதனை யோட்டிவிடஎண்ணுவாரோ
ஆனாலும்பாவியென்பேர லம்புவிற்கண்டிலனே
தேனுரிதழிமுடிச் சிவனார்செயலிதுவோ
வேந்தன்விதித்த விதியின்பயனிதுவோ
ஏதுமறியேனென்றே யிறைவர்மனந்துணிந்தார்

### மதுரைவீரனை வனத்தில் விடச்சொன்னது

தூதுவரைவிட்டரசர் தோழிகளைவரவழைத்து
மாதுகற்பூரவல்லி மைந்தனைப்பொற்றட்டில்வைத்து

மேதினியோர்காணாமல் மிகவிருண்டகாட்டிலுள்ளே
காதலறுமகனைக் கைக்கொண்டுபோய்விடுத்து
வாருங்களென்றுசொல்லி மன்னவர்வரக்களித்தார்
காரும்வெருண்டோடுங் கருங்கூந்தற்றோழியர்கள்
அந்தமொழிகேட்டு யந்தப்புரஞ்சேர்ந்து
கன்னிகற்பூரவல்லி கடிவாசலுட்புகுந்து
கண்ணீர்ததும்பிடவே காயம்நடுங்கிடவே
வண்ணமுகஞ்சோர்ந்து வாடிமிகவழுது
செல்வன்பிறந்ததினந் தேசத்துக்காகாதென்று
வல்வேந்தருன்மகனை வனத்தில்விடவாக்களித்தார்
ஏங்கட்கரசியரே யாங்களென்னசெய்வோமம்மா
செங்கோலரசரது சித்தமறியோமம்மா
என்றந்ததாதியர்க ளியம்புமுறைகேட்டு
குன்றினையொத்தஸ்தனத்தால் கூக்குரலிட்டேயழுது
கண்ணிலறைந்துகொண்டாள் கையைமுறித்துநின்றாள்
மண்ணில்விழுந்தழுதாள் மார்பிலடித்தழுதாள்
கூந்தல்விரித்தரசி கூச்சலிட்டுத்தானழுதாள்
ஏந்திழைமார்களேயான் என்னசெய்வேனென்றழுது
மைந்தனறனையிழந்த மாபாவியென்பாரே
அழகுமகனில்லாத அரும்பாவியென்பாரே
காட்டில்மகனைவிட்ட கடும்பாவியென்பாரே
நாட்டிற்பலபேர்கள் நகைத்திழந்துசொல்வாரே
என்செய்வேன்சிவனேயென் றேங்கிமிகத்துடித்து
வன்விதியைத்தானினைந்து சலித்துமனம்நொந்து
முட்டியழுதாள்மகன் முகம்பார்த்துதானழுதாள்
கட்டியெடுத்துமவன் கண்முகத்தைப்பார்த்தழுதாள்
அப்பாமகனேயென் னருமைத்திருமகனே
இப்பாரையாளவந்த வெங்கள்குலக்கொழுந்தே
தேடக்கிடையாத செழுந்தேனேதெள்ளமுதே
நாடாளவந்தயெங்கள் நாயகமேகற்றிருவே
தவமாதவமிருந்து தான்பிறந்தரத்தினமே
அவமானக்காட்டில்விட அரசர்மனங்கொண்டாரே
மாபாவியென்வயிற்றில் வந்துதித்தபாக்கியமே
பூபாலருனைவனத்தில் போக்கிவிடச்சொன்னாரே
இந்தவிதிக்கோநீ என்வயிற்றில்வந்துதித்தாய்
அந்தபிரமனுனக் கமைத்தவிதியிதுவோ

பிள்ளையில்லையென்று பெருந்தவசுநான்புரிந்தேன்
வள்ளலில்லையென்றுபல வகைவிரதம்நான்புரிந்தேன்
ஐயோதிருவுளமே ஆதிசிவனேயென்று
கையைநெரித்து கத்திச்சலித்திளைத்தாள்
பக்கலிலேநின்றிருந்த பாங்கிமார்தானெடுத்து
மிக்கதுயர்நீங்க மெல்லியரைத்தேற்றுவித்தார்
பட்டணத்துமன்னர் பலராஜர்மந்திரிகள்
திட்டமுள்ளசேவகர்கள் சேனைத்தலைவர்மற்றோர்
கற்பூரவல்லி கடிமனையினுட்புகுந்தார்
துளசிமகாராஜர் துயரமிகவடைந்து
தளராதேயென்றந்த தையலரைத்தேற்றுவித்து
மன்னன்மனைவியரு மண்ணுருகத்தானழவே
அன்னைதுயர்கண்டு அனைவோருமேயழுதார்
பட்டணத்திலுள்ளவர்கள் பார்த்துமிகவழுதார்
அட்டதிக்குமன்ன ரழுதுமிகச்சூழ்ந்துவர
அப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
இப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
பாங்கியர்க்குபார்வேந்தன் பகர்ந்திட்டானப்போது
தாங்கிறாரம்மகனை தாதியர்பொற்றட்டதனில்
வைத்துத்துளசி மகாராஜர்முன்புவந்தார்
இத்ததியேதூதுவரை யெடுத்துமுத்துத்தண்டிகையை
கொண்டுவரச்சொன்னவுடன் கொண்டுவந்தார்பொற்சிவிகை
மண்டலமாளும் மகுடமன்னரக்கணமே
மண்ணுமுத்துத்தண்டிகையில் மைந்தனையேற்றுவித்து
இந்தக்குழந்தைதனை எல்லோருங்கொண்டேகி
காட்டில்விட்டுவாருமென்று கட்டளையிட்டானரசன்
கேட்டவர்கள்செங்கோலின் கீழ்படிந்துபோகலுற்றார்
முத்துச்சிவிகையைச்சூழ் முடிமன்னர்முக்கோடி
யானையொருகோடி யணித்தேரிருகோடி
சேனைபலகோடி ஜெயவீரரென்கோடி
ஆட்டமும்பாடல்களு மதிர்வேட்டுக்கோஷ்டமுடன்
கூட்டமுடன்மகனைக் கொண்டுநடக்கலுற்றார்
காசிநகரைவிட்டு கடுகவெளியில்வந்தார்
தேசிகுலமன்னர்வாழ் சிறப்பானவீதிவிட்டு
யானைவிலைமதிக்கும் மருமன்னர்கள்வீதிவிட்டு
சேனைத்தலைவர்வாழும் சிங்காரவீதிவிட்டு

குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிவிட்டு
சதுரில்நடனமிடுந் தாதியர்கள்வீதிவிட்டு
போட்டசட்டைவாங்காத பொந்திலியர்வீதிவிட்டு
கொட்டிப்பலதொழில்செய் கொல்லர்வாழ்வீதிவிட்டு
காசிநகரைவிட்டுக் கானகத்திற்போய்புகுந்து
தேசமன்னரெல்லவருஞ் சிறந்தவனம்புகுந்து
காரைப்படர்ந்தவனம் கருங்களாப்பூர்க்கும்வனம்
தூரைபடர்ந்தவனம் சுண்டைக்காய்காய்க்கும்வனம்
குன்றுமலைகளிலே கொடும்புலிகள்சூழும்வனம்
ஆறுமடுவுகளும் அழகாய்நிறைந்தவனம்
கூடும்பெருமிருகம் குலாவியிருக்கும்வனம்
சிங்கங்கரடி செந்நாய்நெருங்கும்வனம்
எங்கும்விஷப்பாம்பு இருந்துகுலாவும்வனம்
இன்னம்பலமிருக மிருக்கும்வனந்தனிலே
மன்னுமகனைமுத்து வண்சிவிகையோடிறக்கி
திட்டமுள்ளபுல்லிடத்தைத் தெரிந்துமவர்பார்த்து
தட்டோடுபாலகனைத் தாழவேதானெடுத்து
மண்ணில்வைத்தபாலன்றன் மதிமுகத்தைப்பார்த்தழுதார்
கண்ணீர்சொரிந்தார்கள் கதறியழுதார்கள்
திரண்டுவந்தசேனைகள் திகிலடைந்துதானழுதார்
இருண்டவனந்தனிலே எல்லோருந்தாமழுதார்
காட்டைவிட்டுநாட்டிற் கடுகநடந்தார்கள்
மலைகள்குகைநடந்து வந்தார்கள்பட்டணத்தில்
கோட்டையிற்செல்லுதற்குக் குறுகிநடந்தார்கள்
உலகாளுமன்னவர்க்கே வுத்தரஞ்சொன்னார்கள்
அவரவர்வாழிடத்தி லன்பாயிருந்தார்கள்
நகையில்லாப்பாலனுக்கு நடக்கின்றவாருசொல்வேன்

## மதுரைவீரனுக்கு நாகமுதவியது

பாலகனுமப்போது பாரவனந்தனிலே
ஓலமிட்டுதானலறி ஓங்கியழுகையிலே
மாமரத்தினிழலிலே மைந்தன்தனித்திருந்து
தாமரைநீர்போலத் தயங்கிபழுகைக்கண்டு
மாணிக்கநாகமது மனமதுமிகவுருகி
ஆணிப்பொன்போல்விளக்கு மரசமைந்தன்பக்கலிலே
வந்துபடம்விரித்து மதிமுகத்தைதான்பார்த்து

அந்தக்குழந்தைக் கரியமுத்தந்தான்கொடுத்து
புத்தியும்யோகமும் பொருந்தியிருப்பதற்கு
நாக்கில்சரஸ்வதிதான் நன்ருகத்தான்விளங்க
முகத்தில்திருவழகு முன்னின்றுதான்விளங்க
எதிர்த்தவரைவெல்ல ஏமனதுஅட்சரமும்
நீச்சனில்லாவீட்டில் நிச்சயமாய்த்தான்பார்த்து
அலங்காரவீரனென்று ஆனதொருபேரும்வைத்து
மன்னர்களைவெல்ல மந்திரவாள்கைகொடுத்து
வீரப்பனென்றுசொல்லி விதமாய்மதுரையிலே
பூசைபலிகொடுத்து போற்றித்துதித்திடவே
இந்தப்புவியோரை யென்னென்றுகாத்திடவே
மீனுக்ஷிகம்பத்தடி விளங்கவேநீயிருப்பாய்
முன்பூசைகொண்டு முப்பூசைதான்பெறுவாய்
பத்துவயதினிலே படைமுகம்வென்றிடுவாய்
கள்ளரைவென்று கனமதுரையாண்டிடுவாய்
பெண்களினுலே பெரும்பதத்தைசேர்ந்திடுவாய்
என்றுமேசொல்லி யினிதாகதான்வாழ்த்தி
தேவாமிர்தத்தை தினந்தோறும்தான்புகட்டி
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

### மதுரைவீரனை சக்கிலிச்சி கண்டெடுத்தது

காசிநகரைச்சேர்ந்த கனமானகிராமத்தில்
மாலைவனந்தனிலே பாதரட்சைதைத்துவளர்
மாதிகச்சின்னுன் மனைவியாம்சக்கிலிச்சி
மைந்தனில்லையென்றுசொல்லி மதிமயங்கிதானிருந்து
பாதரட்சைதானம் பரிவாகத்தான்கொடுத்து
காசிவிஸ்வநாதனையும் கனகவிசாலாக்ஷியையும்
பூசையனுஷ்டானம் புதியதவம்புரிந்து
மாதிகன்தேவியும் மன்னும்தரைமெழுகி
போசனஞ்செய்து புண்ணியமிகச்செய்து
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
பாங்கானமாதிகனும் பாதரட்சைதைத்திடவே
வாறுகளும்சம்புகளும் வகையாகவூறவைக்க
ஆவாரம்பட்டைக்கு அன்புடனேபோவென்ருன்
நல்லதென்றுசொல்லி நலமுடனேமங்கையுமே
அசைந்துநடந்தாளே அந்தவனந்தானேக்கி

காசிநாடாளுமன்னன் கண்மணிக்குநேரான
பாலனிருக்குமந்த பாரவனம்நோக்கி
வழிகூடப்போகையிலே மங்கைநல்லாளப்போது
காணுதசற்சகுனங் கண்டாளேகண்களிக்க
கரகம்வலமாச்சு காடையிடமாச்சு
மங்கிலப்பெண்கள் வாழ்த்திவரக்கண்டாளே
தையநல்லாள்தானும் தண்ணீரைத்தான்கொண்டு
நிறைகுடங்கொண்டு நேராகத்தான்வரவே
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
அசைந்துநடந்தாளே அன்னம்போலவ்வனத்தில்
காட்டில்புகுந்தாளே காரிகையுமப்போது
அரிவாளுங்கைபிடித்து ஆவாரம்பட்டைவெட்டி
பட்டையெடுத்துக்கட்டி பயணமதாய்வருகையிலே
மாமரத்தின்கீழே மைந்தனைக்கண்டாளே
நாகத்தைபோற்றிசெய்து நலமுடனேதெண்டனிட்டு
மன்மதனுக்கொப்பான வடிவுள்ளபாலகனை
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
பிள்ளைகளிதீர்க்கவந்த பெருமையுள்ளமைந்தனென்று
வாரியெடுத்து மார்போடேதானணைக்க
பைங்கிளியாள்தன்னுடம்பு பசுமைநிறந்தானுச்சு
பாரஸ்தனங்களிலே பாலுஞ்சொரிந்திடவே
பாலகனும்பால்குடித்துப் பசியானபின்பு
கோலமயிலனையாள் குளிர்ந்துமனமகிழ்ந்து
பாலகனைமடியில்வைத்து பட்டையுந்தானெடுத்து
வேர்த்துவிரிவிரித்து வீட்டுக்குவாருள்காண்
இவள்-வருவதற்குள்ளாக இந்நேரமென்னவென்று
சந்தேகந்தோன்றிச் சக்கிலியன்தானெழுந்து
கையில்தடியெடுத்துக் கனத்ததொருதோளில்வைத்து
பூமியதிர்ந்திடவே பொற்கொடியைததான்தேடி
கோபமமிகக்கொண்டு கொம்பனையாள்முன்வந்து
கண்டானேபெண்ணனங்கை கண்கள்சிவந்திடவே
இந்நேரங்கானகத்தி லென்செய்தாயென்றுசொல்லி
சக்கிலியன்தானுந் தடியெடுத்துநோக்கையிலே
அடியாதேயென்கணவா அதிசயஞ்சொல்லுகிறேன்
கோபத்தைத்தானடக்குங் குணமுள்ளபத்தாவே
மைந்தனில்லாததனால் மாதவஞ்செய்தோமோ

பிள்ளைகவலை பெருங்கவலைதீர்ந்ததிப்போ
ஆதிசிவகர்த்தனமக் காண்பிள்ளை தான்கொடுத்தார்
மாணிக்கம்போலிருந்த மைந்தன் றனையளித்தார்
இந்தாரும்பிள்ளையென் றேந்திழையாள்தான்கொடுத்தாள்
கட்டோடுபாலகனை தான்வாங்கிச்சக்கிலியன்
இன்பக்கடல்குளிர்ந்து யிருபுஜமும்பூரித்தான்
வீட்டிலேதான்வந்து மெல்லியுடன்சின்னனும்
சக்கிலிகையில் தனையன்றனைக்கொடுத்து
தச்சனொருவனைப்போய்த் தானழைத்துவந்தான்காண்
மைந்தனுக்குத்தொட்டில் வளமுடனே செய்யுமென்றான்
அப்படியேதச்ச னமைத்தானேதொட்டிலுமே
மாணிக்கத்தைப்புதைத்து வச்சிரத்தால்பூண்கட்டி
பச்சைமரகதமும் பாங்குடனேதானமைத்து
தங்கக்கொலுசுசெய்து தான்பூட்டித்தச்சனுமே
கொடுத்திடமாதிகனும் கோதையருமேவாங்கி
பாலகனைத்தாமெடுத்துப் பதிவானதொட்டிலிலே
கண்மணியைத்தான்வளர்த்தி காரிகைதாலாட்டலுற்றாள்

### மதுரைவீரனுக்குத் தாலாட்டல்

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ

புத்திரனேயுந்தனுக்கு புகழ்ச்சியுடன்தாலாட்ட
நித்திரைசெய்யுமந்த நேரானகண்மணியே ஆ

கண்ணேயுறங்குறங்கு கற்பகமே நித்திரைசெய்
கண்ணேஎன்கண்மணியே கற்கண்டேசர்க்கரையே ஆ

ஆதிசிவன்மகனே ஆயன்மருமகனே
சோதிக்கவந்தவனே துய்யகணபதியோ ஆ

தேனானகண்ணே தெவிட்டாததெள்ளமுதே
பாலூறும்வாயுடைய பாலகனேபைங்கிளியே ஆ

கானகத்தில்நீயுங் கவிழ்ந்துவிளையாட
நானகத்தடுத்துவந்த நாயகமேகண்வளராய் ஆ

எந்தனுக்குப்பிள்ளையென்று யீஸ்வரனார்தந்தகண்ணே
சுந்தரமாய்நித்திரைசெய் சொர்ணமயதொட்டிலிலே ஆ

பிள்ளைகவலை பெருங்கவலைதீர்க்கவந்த
வள்ளலேகண்ணே மணியேமணிவிளக்கே ஆ

மாறுபடாபாலகனே மாசிலாக்கண்மணியே
வேறுபடாபுத்தமுதே விண்மணியேகண்வளராய் ஆ

அங்கையர் கண்ணம்மை அருள்பெற்றபாலகனே
எங்கள்குடி தழைக்க என்மகனேகண்வளராய் ஆ

இப்படித்தாலாட்ட யேத்தசிறுபாலகனும்
நித்திரையுஞ்செய்து நினைவுவந்துபாலகனும்
பசியெடுத்துப்பாலகனும் பதறியழுகையிலே
தாவியேசக்கிலிச்சி தானெடுத்துப்பால்கொடுத்தாள்
பால்கொடுத்துப்பசியமற்றி பாலகனுக்கப்பொழுது
எண்ணெய்த்தலையிலிட்டு யிளம்வெந்நீர் தான்வார்த்து
உச்சியூதித்துடைத்து உடம்பெல்லாந்தான் துவட்டி
திட்டமுள்ளநெற்றியிலே திருநீற்றுகாப்புமிட்டு
நேரானநெற்றியிலே நிலகாப்புதானுமிட்டு
நீலவிழிகண்களுக்கு நேர்மையுடன்மையெழுதி
பிள்ளைக்குத்திருஷ்டி பிரியமுடன்சுற்றுதற்கு
நெல்லும்அறுகும் நேரானமஞ்சளுடன்
பருத்திவிரை சுண்ணும்பு பரிவாகத்தான்பிசைந்து
தண்ணீர்முகந்துவந்து தாம்பாளத்திற்போட்டு
இப்படியாக இனிதுவளர்க்கும்வேளையிலே
மாதிகனைத்தானழைத்து மங்கையாளேதுசொல்வாள்

### மதுரைவீரனுக்குக் காதுகுத்துதல்

மூன்றும்பிராயத்திலே முத்தமிட்டுக்காதுகுத்த
நல்லநாள்கேட்டு நக்ஷத்திரந்தான்பார்த்து
திட்டமுள்ளதட்டானைச் சீக்கிரமாயழையுமென்றாள்
அந்தநல்லால்சொற்கேட்டு ஆனதொருமாதிகனும்
கூட்டிவந்துதட்டானைக் குழந்தையைப்பாருமென்றான்
பார்த்துமந்ததட்டானும் பாலகனுக்கேற்றுப்போல்
தங்கத்தால்கம்பி சதுராகத்தான்வளைத்து
கீழ்க்காதைமேற்காதை கிரமமாய்குத்திவிட்டான்
படியரிசிதக்ஷணையும் பாக்கிலையுஞ்சர்க்கரையும்
அத்தனையுந்தான்கொடுத்து அனுப்பினான் தட்டானை
மாதிகனும்மங்கையரும் மனதுமிகத்தான்குளிர்ந்து
சந்தோஷமாகித் தயவாயிருபேரும்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

### மதுரைவீரன் சக்கிலியன் வீட்டில் வளருகிறதைக் காசிராஜாவுக்கு தெரிவித்தல்

காசிப்பட்டணத்திலிருக்குங் கனத்தவெகுமாந்தர்களும்
மாதிகச்சின்னனுக்கு மைந்தன்வந்தசேதிதன்னை
பட்டணத்திலுள்ளஜனம் பாங்குடனேதாமறிந்து
இராஜனுடபிள்ளையென்று நயமாகவோடிவந்து
மாதிகச்சின்னனும் மைந்தனைவளர்க்கின்றான்
என்றவர்கள்சொல்லி இந்தச்சமயத்தில்
இப்பெரியபட்டணத்தி லிருந்தோமேயானக்கால்
தன்பிள்ளையென்று தானழைத்துக்கொன்றிடுவான்
மறுதேசம்போய் மங்கையரேநாம்பிழைப்போம்
அப்படியேநல்லதென்று அன்பாயிருவருந்தான்
மைந்தனைத்தானெடுத்து மறுதேசம்போனார்கள்
காடுமலைதாண்டி கடுகிநடந்தார்கள்
பொம்மணன்சீமைக்கு பொட்டெனவேவந்தார்கள்
யாதென்றுசொல்லி யழைப்பித்தார்பொம்மணனும்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்திங்குவந்தீர்
என்றதற்குமாதிகனும் ஏந்திழையுஞ்சொல்லுகிறான்
காசியென்னும்பட்டணத்தைக் கடந்தவரலாற்றைக்கேள்
பஞ்சைகள்பிழைக்க பரதேசம்நாங்கள்வந்தோம்
வயிறுபிழைக்க மறுதேசம்நாங்கள்வந்தோம்

### மாதிகச்சின்னன் பொம்மண நாயக்கனிடத்திற் சேவகத்திற் கமர்தல்

அந்தநல்லசேதி அறிந்தானேபொம்மணனும்
என்னிடத்திற்சேவகமா யிருப்பாயோமாதிகனே
அப்படியேநல்லதென்று அமர்த்தினன்பொம்மணனும்
சேவகஞ்செய்து சீருடனே தானிருந்தான்
சந்தோஷமாகத் தயவாயிருக்கையிலே
பிள்ளைச்குச்சிங்காரம் பிரியமுடன்பூட்ட லுற்றான்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நிழல்கண்ணாடியும்பட்டி
காதிலேமத்திக்காய் மனமாகத்தொங்கவிட்டு
பச்சைக்கல்முருகு பவளத்தால்தாழ்வடமும்
காலிற்சிலம்பணிந்து கைக்குத்தங்கக்காப்புமிட்டு
பூணாரமெல்லாம் பூட்டினன்மாதிகனும்


நாளொருமேனியுமாய் நலமாகத்தான்வளர்த்தான்
பத்துவயதானதினமேல் பதினாலாம்வயதுதனில்
சரிகைசந்திரகாவி தலைப்பாகைசுட்டியுடன்
வன்னகம்பிச்சோமன் வகையாயுடுத்தியங்கே
பட்டுக்கம்பிச்சோமன் பாங்காய்வரிந்துகட்டி
இடதுபுறத்தொங்கலிலே ஏமனுடஅட்சரமும்
வலதுபுறத்தொங்கலிலே வடமலையானட்சரமும்
பார்வதிகடாக்ஷத்தால் பரிவாகவுண்டாச்சு
பஞ்சவர்னப்பட்டாடை பாங்கானசாலுவையும்
முன்கையிற்பந்தனமும் முறுக்கிவிட்டமீசைகளும்
கஸ்தூரிபொட்டுமிட்டுமிட்டுக் கனத்ததிருமார்பிலுமே
சந்தனமும்புனுகுந் தாராளமாய்பூசி
இப்படியாய்த்தானே இருந்துவருகையிலே

## மதுரைவீரன் பராக்கிரமம்

குச்சிவுருமாலைகட்டிக் கூசாமல்வீரையனும்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
காலில்மிதியடியுங் கையிலுண்டைவில்பிடித்து
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை எண்ணியேபாராமல்
கண்டமுனிராக்ஷதரைக் கண்டதுண்டமாக்கிடுவான்
காளிகதவடைக்கக் கண்டமுனிதெண்டனிட
வேட்டைகளாடுவதும் வேங்கைபுலிகுத்துவதும்
மாதிகன்சொல்கேளான் வனங்களிலேபோய்விடுவான்
கரடிபுலிசிங்கம் காட்டானைகொல்கிறதும்
வேஷங்கள்மாறி வீட்டில்வருகிறதும்
வருகிறதைக்கண்டு மாமமானமகிழ்ந்து
வந்ததொருவீரனுக்கு வரிசையுடனன்னமிட்டு
குத்தும்பருப்புமிட்டுக் கூசாமல்நெய்வார்த்து
சுண்டக்கறிவகையுஞ் சுகிப்பான்போஜனமும்
வாழைப்பழஞ்சர்க்கரையும் வகைவகையாய்தான்சமைக்க
சாப்பிட்டுக்கையலம்பித் தாம்பூலந்தான்தரித்து
பள்ளியறையிற்புகுந்து பாங்கானகட்டிலிலே
பள்ளிகொண்டுவீரையனும் பண்பாயெழுந்திருந்து
இப்படிதானும் இருக்குமந்தவேளையிலே

## தொட்டியன் மகள் குதுவானவிடத்தில் மதுரைவீரன் காவலிருந்தது

பட்டணத்தையாளும் விரிவானதொட்டியனும்
பொம்மணநாய்க்கன்மகள் பொம்மியம்மாளென்பவள்காண்
புத்தியறிந்ததன்மேல் பூவைதனை பொம்மணனும்
ஊருக்குமேற்கே ஒருநாழிதூரத்திலே
பச்சைகுடிசைகட்டிப் பண்பாயலங்கரித்து
பொம்மியம்மாளைப் பொங்கமுடன்கூட்டிவந்து
அந்தக்குடிசைதனில் அமர்ந்திருக்கச்செய்துவைத்து
மாதிகச்சின்னானை வரவழைத்துத்தானுடனே
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
காட்டானைசிங்கம் கரடிபுலிவாராமல்
கள்ளர்திருடர் கடுவிஷங்கள்தீண்டாமல்
காற்றுமழைவந்ததென்று காவல்தப்பிபோகாமல்
இருட்டுகருக்கலென்று ஏமாந்திருக்காமல்
முப்பதுநாளும் விழித்துக்கொண்டுதானிருந்து
பைங்கிளியாள்கண்ணுளைப் பத்திரமாய்க்காத்திருப்பாய்
காரும்பிள்ளாயென்று கட்டளையுமிட்டானும்
நல்லதையாவென்று நலமுடனேமாதிகனும்
மாதிகச்சின்னானும் மாளிகைக்குத்தான்வந்து
குச்சிவுருமாலைகட்டி கொடுவாளுங்கையேந்தி
கச்சைவரிந்துகட்டி கட்டாரிகைபிடித்து
அம்புவில்லும்கையேந்தி ஆயுதங்கள்தான்தரித்து
பொம்மியம்மாள்காவலுக்கு போய்வாரேன்மாதிகனுன்
அல்லும்பகலும் அறுப்துநாழிகையும்
காகமணுகாமல் கருங்குருவிநாடாமல்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
இப்படியாக இவன்காக்கும்நாளையிலே
வருணபகவானும் வந்துகவிழ்ந்ததினால்
ஈரேழுலகமெல்லாம் இருள்வந்துசூழ்ந்ததினால்
வயதுசென்றமாதிகனும் மனதுநொந்துமெய்நடுங்கி
பொம்மியம்மாள்காவலுக்குப் போகக்கூடாமையினால்
மனதிலேயெண்ணி மகனுடனேசொல்லலுற்றான்
வீரப்பன்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து



இந்தயிருட்டிலேதான் எப்படிநீர்போவீரையா
பிள்ளையென்றுதானிருக்க பெரியவரேநீர்போகலாமோ
மங்கையுடகாவலுக்கு மகன்தானுன்போய்வாரேன்
என்றுசொல்லித்தானும் எழுந்திருந்தான்வீரையனும்
எழுந்திருந்துதான்போய் எண்ணமற்றகாளையவன்
சலவைக்கல் மண்டபத்தில் சாமிபோல்நின்றுகொண்டு
சம்பங்கிஎண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் கோணமல்சிக்கறுத்து
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்தான்முடித்து
சிவசிவாவென்றே திருநீரணிந்துகொண்டு
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மார்பதனில்
பஞ்சவர்ணப்பட்டாடை பாங்காயலங்கரித்து
சிவந்தவுருமாலை செண்டுகட்டும்பாவனையாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதலம்பூச்சலடமாம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
முன்னின்றதொங்கலிலே மோககன்னிஅட்சரமாம்
பின்னின்றதொங்கலிலே பிர்மாவின்அட்சரமாம்
உள்ளேகபாயணிந்து உடம்பெல்லாம்அங்கிபூண்டு
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
பாசிபந்துதாயித்தும் பாங்காகக்கையில்கட்டி
ஆபரமெல்லாம் அலங்கரித்துதானுமப்போ
எட்டுதுலாங்கத்தி இத்துடனேகேடயமும்
உண்டைவில்லுங்கையில் உடைவாளுந்தான்தரித்து
பாக்குடனேவெற்றிலையும் பாங்காகத்தான்வாங்கி
மாதிகச்சின்னனை வந்துகண்டேயந்நேரம்
பொம்மியம்மாள்காவலுக்கு போகவிடைதாருமையா
அப்படியேபோய்நீ அனுதினமும்காவல்செய்வாய்
என்றுசொல்லக்கேட்டு ஏத்தமுள்ளதென்மதுரை
நடந்தான்காண்வீரையனும் நாலுதிக்குந்தானதிர
சிங்காரத்தோப்பைக் சீக்கிரமாய்த்தான்பார்க்க
அலங்காரத்தோப்பில் அச்சமுற்றுத்தான்சேர்ந்தான்
பைங்கிளியாள்தன்குடிசை பக்கமேபோய்ச்சேர்ந்தான்
அந்நேரவேளையிலே ஆரணங்குபொம்மியம்மாள்
குடிசைவிட்டிவெளியில்வந்து கொப்பெனவேதான்பார்த்து
தென்மதுரைநிற்கிறதை தேன்மொழியுங்கண்டாளே
நிற்கிறதைக்கண்டு நெடுநேரமெய்மறந்து

ஆரோதெரியாது அர்த்தராத்திரிவேளைதன்னில்
மாதிகனல்லயிவன் மாற்ருனைக்காணுதென்று
ஆரடாநிற்கிறவன் அஞ்சாமற்சொல்லிடுவாய்
ஆரோவெனச்சொல்லி அஞ்சாதேமங்கையேநீ
மாதிகசின்னான்பெற்ற மைந்தன்நானென்ருன்
நல்லதென்றுசொல்லி நடந்தாள்குடிசைக்குள்
பைங்கிளியாள்போய் படலெடுத்துசாற்றியபின்
கட்டிலின்மீதிருந்து கட்டளைகள்சொல்லுகிருள்
பத்திரமாய்நீயும் படுத்திரடாவென்றுசொன்னுள்

### மதுரைவீரன் பொம்மியம்மாளிடம் சேருதல்

மதுரையன்தான்கேட்டு வகையுடனேபேசலுற்ருன்
போட்டதொருகட்டிலில் போய்படுத்தாய்பெண்ணேநீ
ஒண்டியொருவனுமா யுட்கார்ந்திருப்பேனே
மங்கையரேநானும் மழையில்நனைகிறது
ஆண்பாவம்பொல்லாது அதட்டினுல்தோஷமடி
இருட்டிலொருவனுமா யிருப்பேனேபெண்ணரசே
குடிசைக்குள்வரவழைத்தால் கோடிதர்ம முண்டுனக்கு
இவ்வார்த்தைகேட்டிருந்த ஏந்திழையுங்கூறுகின்ருள்
சக்கிலிப்பயலுக்குத் தலைப்புழுகு ஆடுகுது
எகுத்தாளம்பேசி எடுத்துரைக்கவந்தாயோடா
காவல்செய்யவந்தாயோ கற்பழிக்கவந்தாயோ
என்னபிணைத்துகிருய் எழுந்திருந்துபோடாநீ
கூவென்ருல்கேட்டு கோடிபடை வந்துவிடும்
உந்தனைவெட்டி உயிர்க்கழுவில்போட்டிடுவார்
பையலென்றபோதே பதைக்குதடியென்மனது
தலைவெட்டிப்போனுலும் சக்கிலிநான்விடுவதில்லை
உந்தனையும்விட்டெந்த னுயிர்தானும்போகாது
ஈரத்தில்நின்ருல் என்னுடம்புக்காகாது
எந்தனுடநீயும் இசைவாகத்தான்கூடி
குடிசைக்குளேனையழைத்து கூடினுலுந்தனுக்கு
கோடிதருமமுண்டு கோதையேநம்படிநீ
சக்கிலியனுனலுந் தனஞ்செயனுனவண்டி
கன்னியேகொஞ்சநாளில் காட்டுகிறேன்சவுரியத்தை
இந்நேரவேளைதனி லிருவருமேகைகலந்து
மருவியிருவருமாய் மங்கையேபெண்மயிலே

காமவிகாரங் களையாய்வருகுதடி
மன்மதபாணம் மார்பில்வந்துதைக்குதடி
பஞ்சணைமெத்தையின்மேல் பக்கத்திடங்கொடுத்து
இருவருமாய்க்கூடி இருப்பமடிபெண்ணரசே
கூடியிருந்தோமானால் கோதையரே நீதானும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசிவாழ்ந்திருப்பாய்
பால்பழமுஞ்சர்க்கரையும் பசியாமலுண்டிருப்பாய்
வெற்றிலையும்பாக்கும் விதவிதமாய்த்தானுகர்வாய்
ஏதேதுகேட்டாலும் எடுத்துவந்துநான்தருவேன்
மங்கையேநான்கேட்கிறது உன்மனதுமுருகலையோ
கல்லுங்கரையுமடி கடலும்இருகுமடி
உன்வடிவுக்கேற்ற உத்தமனும்நான்தாண்டி
ஏதுக்குமஞ்சாதே இளமயிலேபெண்ணணங்கே
இப்படியாக இன்பமுடன்கேட்கையிலே
பேடைமயில்போல பெண்ணணங்குகேட்டிருந்து
எண்ணதுமெண்ணி ஏங்கியழுகலுற்றாள்
ஈஸ்வரனேஎன்தலையில் என்னயெழுதிவிட்டாய்
கன்னிக்கழியாமல் கல்யாணஞ்செய்யாமல்
சக்கிலியன்கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
என்றுசொல்லிகன்னியரு மேங்கிமுகம்வாடி
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
பவளம்போல்கண்ணீரை பக்கமெல்லாஞ்சோரவிட்டாள்
அழுதுமுகம்வாடி அவளிருக்குங்குடிசைக்குள்
மண்டியிட்டுத்தானுழைந்து மடிமேலுட்காரவைத்து
மங்கையரைத்தானும் மார்போடேதானணைத்தான்
ஏந்திழையேயுந்தனுக்கு என்னவிசாரமடி
ஆரென்றிருக்கிறாய் அருங்கிளியேபெண்மயிலே
காசிராஜன்பெற்ற கருத்துள்ளவீரனடி
மகிமைதெரியாமல் மயங்குகிறாய்பெண்மயிலே
என்றுசொல்லித்தானும் எடுத்தவளைக்கண்துடைக்க
மங்கையரும்பார்த்து மனமுங்குளிர்ந்தாளாம்
தெளிந்துமுகமலர்ந்து தேன்மொழியாளப்போது
கண்குளிரப்பார்த்து கன்னிகையுமேதுசொல்வாள்
முன்னழகும்பின்னழகும் மூவுலகிற்கிட்டாது
மார்பழகைக்கண்டால் மயங்குவார்கோடிபெண்கள்
உருமாலைகட்டழகும் உருத்திராட்சந்தன்னழகும்

சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மங்கையற்கு
புனுகுசவ்வாது பொங்கமுடன்பூசலுற்ருன்
மல்லிகைப்பூசண்பகப்பூ வரிசையாய்த்தான்தரித்தார்
உத்தரியந்தானெடுத்து உத்தமிமேல்தான் தரித்தான்
மங்கையருமப்போது மனமகிழ்ந்துகட்டிலின்மேல்
என்னைவலதழிக்க எத்தனைநாள்காத்திருந்தாய்
மகாதேவரருளினல் மண்பிடித்தவேளையிலே
மன்னவனேயெந்தனுக்கு வளர்ந்தீரோபூமிதனில்
என்றுசொல்லிதானகைத்து இசைவாகக்கன்னிகையும்
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகமுன்புவைத்தாள்
பாக்கிலையுந்தானருந்திப் பரிந்துவிளையாடிக்
காமவிகாரங் கண்ணைமறைத்ததப்போ
மன்மதபாணம் மார்புருகிப்போகையிலே
தோகையணிந்த துகிலாடைதான்கலைந்து
மங்கையரைத்தானணைத்தான் மாணிக்கக்கையாலே
கட்டியணைத்தான் கனிவாயைமுத்தமிட்டான்
முகத்தோடேமுகம்வைத்து முத்மிட்டாரிருவருமாய்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
பார்வதியாள்தன்னுடனே பரமசிவன்சேர்ந்ததுபோல்
கூடிமகிழ்ந்து குலாவிவிளையாடி
மதுரைமகாவீரன் மங்கையுடன்தான்சேர்ந்தான்
இப்படியாக யிருந்துவிளையாடியபின்
கட்டில்விட்டுத்தானிறங்கி கன்னியுமப்போது
புருஷனேதெய்வமென்று பொற்கொடியும்தானினைந்து
தென்மதுரைவீரனுக்கு தெண்டனிட்டுநிற்கையிலே
மன்னவனுமப்போது மங்கையரைத்தானெடுத்து
காலில்விழுந்த காரணத்தைக்கேட்கலுற்ருன்
பெண்ணரசிவாய்திறந்து பிரியமுடன்சொல்லுகிருள்
மானிடர்தானே மகாதேவர்நீதானே
எவ்வுலகராஜாவோ ஈஸ்வரனர்தன்மகனே
ஆர்பெற்றகண்மணியோ அறிவையற்குகூறுமென்ருள்
மாதிகன்வீட்டில்வந்த வகையதனைச்சொல்லுமென்ருள்
தாய்தகப்பன்பேருந் தனஞ்செயனேசொல்லுமென்ருள்
மதுரையான்வந்தவகை மங்கையரேசொல்லுகிறேன்
கைலாசநாதர் கடாக்ஷத்தின்தன்னாலே
காசிமகாராஜனுக்கு கண்மணியாய்நான்பிறந்தேன்

மாலையுடன்பிறந்தேனென்று வனத்திலேபோட்டுவிட்டார்
வனத்திலிருந்துஎன்னை மாதகிஎடுத்துவந்தாள்
சக்கிலியன்வீட்டில் வளர்ந்தவண்டிதையலரே
என்றுசொன்னசொற்கேட் டினிதாய்மனமகிழ்ந்து
இந்தமட்டுந்தான்சேதி இனியொன்றும்நானறியேன்
என்றுசொன்னசொற்கேட் டினிதாய்மனமகிழ்ந்தாள்
பொழுதுவிடியுது போய்பிழையுமன்னவனே
நாளைப்பொழுதிலுன் நாகரீகம்பேசுவீர்காண்
இப்படித்தானு மிருக்குமந்தவேளையிலே
கங்குல்விடிந்துக் கதிரோனும்வந்துதித்தான்
தேன்மொழியாள்குடிசைவிட்டு சீக்கிரமாய்வெளியில்வந்து
கிழக்குமுகமாயிருக்குங் கேணியிடம்போயதனிற்
கால்முகஞ்சுத்திசெய்து கனிவாயும்கொப்பளித்து
சிவசிவாவென்றே திருநீறுதானுமிட்டு
அரகராவென்றுசொல்லி ஐயனையும்தான்தொழுது
கோதைமயிலனையாள் குடிசைக்குள்தானுழைந்தாள்
மதுரைவீரன்தானும் மாதிகன்வீடுபோனான்
மாதிகனுமோடிவந்து மைந்தனைத்தான்தழுவி
இன்னேரமென்னசெய்தாய் எந்தனதுகண்மணியே
மழையில்நனைந்ததினால் மறந்துநான்தூங்கிவிட்டேன்
நல்லதென்றுகூட்டிப்போய் நலமுள்ளமாதிகனும்
மங்கையரேபெண்ணே மைந்தனுக்குஅன்னமிடு
மாதாமனமகிழ்ந்து வட்டில்விளக்கிவைத்து
சம்பாஅரிசி சமைத்தசாதம்படைத்து
தயிரெடுத்துவார்த்து தயவாய்புசியுமென்றாள்
வற்றல்வடகம் வகையுடனேயூறுகாய்
கூட்டியமுதுண்டான் குணமுள்ளவீரனுமே
உண்டுபசியாறி உத்தமனும்வீற்றிருந்தான்
கங்குல்வருமுன்னே கதிரோனும்போய்மறைந்தான்
அன்றையகாவலுக்கு என்மகனேபோய்வருவாய்
நல்லதென்றுவீரையனும் நடந்தானேயப்போது

### மதுரைவீரன் பொம்மியம்மாளுக்குத் தாலி தரித்தல்

பொன்னுபரணமெல்லாம் பூட்டியலங்கரித்து
ஆயுதமெல்லாமெடுத்து அரிவாளுங்கைபிடித்து
பார்த்தபேர்மோகிக்கப் பஞ்சவர்ணப்பொட்டுமிட்டு

மங்கையர்க்குத்தான்தரிக்க மங்கிலியங்கைக்கொண்டு
காடிக்குடிசைதனை நடந்தானேவீரையனும்
மங்கைக்குடிசைதனில் மன்னவனும்வந்துநின்றான்
காரிழையுமப்போது கண்டுமனமகிழ்ந்தாள்
ஆனாலும்பெண்ணரசே அன்பாகச்சொல்லுகிறேன்
மங்கிலியங்கட்டாமல் மாதேயுனையணைந்தேன்
மங்கிலியஞ்சூட்ட மகிழ்ச்சியாய்வந்தேனடி
இந்தசொற்கேட்டு ஏந்திழையாளப்போது
கழுத்திலேமங்கிலியங் கண்டதேயுண்டானால்
அம்மான்மார்கூடி யறுத்துதுசந்தொடுப்பார்
என்தகப்பன்தானும் இருதுண்டாய்வீசிடுவார்
இப்படியாக ஏந்திழையுஞ்சொல்லிமுடித்தாள்
ஏதுக்குமஞ்சாதே யிளங்கொடியேபெண்மயிலே
ஆதிசிவன்பிர்மா ஆயனுடன்பார்வதியும்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
அரனார்திருமகனும் ஆனைமுகப்பிள்ளையாரும்
எல்லோரும்பார்த்திருக்க இந்தச்சிறுதாலிதனை
மஞ்சள்சரட்டில் வகைவகையாய்த்தான்கோர்த்து
சாணமெடுத்துவந்து சதிராகத்தான்மெழுகி
பிள்ளையார்தன்னை பெட்டுடனேதானிருத்தி
அறுகுபிடுங்கிவந்து அன்பாய்விநாயகர்க்கு
புஷ்பங்கள்தூவியல்லோ போற்றிமிகத்துதித்து
பாதத்தின்முன்பாகப் பாங்கானதாலிதன்னை
வைத்துஇருவோரும்வணங்கியேதெண்டனிட்டு
சாம்பிராணிதூபம் சதுராகத்தான்கொடுத்து
தேவர்களப்போது சிறப்பாகப்பார்த்திருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆண்சிங்கவீரையனும்
சரட்டுடனேதாலிதன்னைச் சாங்கமாய்த்தானெடுத்து
தேவர்களைநோக்கித் தெண்டனிட்டுவீரையனும்
சிவசிவாவென்றுசொல்லித் திருமங்கிலியந்தன்னை
தோகைநல்லாள்கழுத்தில் சூட்டினனப்போது
அந்தரத்தேவர்களு மலங்காரமாகவேதான்
பூமாரிதானும் பொழிந்தார்களக்கணமே
ஆணிமுத்துவீரையனும் ஆரணங்குபொம்மியரும்
திட்டமுடனெழுந்து தீர்க்கமுடன்தேவர்களை
அடிபணிந்துதெண்டனிட்டு அன்பாகநின்றார்கள்

ஆசீர்வாதஞ்செய்து யாவரும்வரமளித்தார்
பொன்னுலகவாசலிலே போனார்கள்தேவரெல்லாம்
ஆணிமுத்துவீரையனை ஆரிழையாள்தான்பார்த்து
ஆதிசிவன்கர்த்தர் அமர்ந்தசபைதானறிய
மங்கிலியந்தான்தரித்த மைத்துனரேவாருமென்றாள்
கட்டிலிலிருவருமாய் கைகோர்த்துதானிருந்து
சிரித்துவிளையாடி தேன்மொழியைத்தானணைந்தான்
அணைத்துவிளையாடி ஆவலெல்லாந்தீர்த்தார்கள்
தீராதஆசையெல்லாந் தீர்த்துஇருவருமாயி
வாருங்கள்மைத்துனரே வார்த்தையொன்றுகேளுமென்றாள்
முப்பதுநாளும் முடிந்ததுகாண்நாளையுடன்
நாளைக்குயிக்குடிசை நலமாகத்தான்பிடுங்கி
மாளிகைக்குத்தானழைக்க வருவார்காணென்தகப்பன்
உன்னைவிட்டுநான்பிரிந்து உகந்துயிருப்பேனோ
யிருவருமாய்கூடி யினிதாய்விளையாட
என்றைக்குத்தானமையும் ஏந்தலேசொல்லுமென்றாள்
நாளைக்கிழமைக்கு நான்வருவேனென்றுசொன்னான்
நாளைப்பொழுதில் நலமாகக்காண்பீர்காண்
அதன்பிறகுஎன்னையல்லோ யார்பார்க்கப்போகிறார்கள்
என்னைத்தவிர ஏவளுனக்குமாகாதோ
தேசத்தில்வேறொருபெண் சிக்காதோதேசிகனே
மண்டலத்தில்நான்தானோ மற்றொருபெண்கிட்டாதோ
என்குறிஞ்சிகோட்டைக்கு இதமாகவந்தீரென்றாள்
கோட்டைக்குறிக்காரர் கொத்தளத்துசேவகரும்
மன்னவரேயுமக்கு வழிவிடத்தான்போறாரோ
பத்துதலைவாசலுக்குப் பத்துலக்ஷங்கோடிமன்னர்
தொட்டியர்கள்காவல் துடுக்காயிருக்குமங்கே
வந்தாலுமும்மை வலிமையுள்ளதொட்டியர்கள்
கள்ளனென்றுதான்பிடித்துக் கைகளைவாங்கிடுவார்
உயிர்கழுவில்போட்டு உன்தலையைவெட்டிவைப்பார்
இந்தப்படிக்காவல் ஏற்றமுள்ளதொட்டியர்கள்
பொல்லாதலண்டன் போக்கிரிகாணென்தகப்பன்
இப்படியெல்லா மகிழ்ச்சியாய்சொன்னேனென்று
மன்னவரேநீர்தானும் மனவருத்தங்கொள்ளாதே
நடக்கும்வகைவழிகள் நானறிந்துசொன்னேன்காண்
என்னைமறவாமல் ஈடேற்றவேணுமென்றாள்

புண்ணியரேயும்மைவிட்டுப் பொருந்தேனரைநாழி
என்றுசொல்லிபொம்மியரும் ஏங்கிமுகம்வாடி
என்னையும்விட்டு இருப்பீரோபூமியிலே
மன்னவரேயும்மைவிட்டு மண்மேலிருக்கேனென்று
கண்ணீரும்விட்டழுது கலங்கினாள்பொம்மியரும்
அதுகண்டுவீரையனு மழவேணடாம்பெண்ணேயென்று
கண்ணீர்தனை துடைத்து காவலனுமேதுசொல்வான்
உன்னைநான்கண்டு ஊர்வழியேபோவேனடி
இருவரும்போய்பிழைப்போம் ஏகமுள்ளபெண்ணரசே
தேறுதலைச்சொல்லித் தென்னவனுந்தானடந்தான்
அந்தநல்லவேளையிலே ஆனதொருமாதிகனும்
மைந்தனைத்தான்பார்த்து மாதிகனுமப்போது
முப்பதுநாளும் முடிந்ததுஇப்போது
ஆகையினாலிப்போது ஆனதொருபொம்மியற்கு
காலுக்கிசைந்ததொரு கனத்தமிதியடியும்
மைந்தனேயுன்கையால் வளமாகசெய்வதற்கு
மிதியடிக்கானதொரு வேனதொருரத்தினங்கள்
தங்கத்தால்சரிகைகளுந் தனிவயிரமுத்துகளும்
பொம்மணநாய்க்கர் புதல்விக்குவேணுமென்று
மிதியடியைத்தைக்க விரைவாகஎன்கையில்
தந்தார்காணிரத்தினத்தை தயவாகஎடுத்து
வாருங்கள்மேலே வகையாகத்தான்சமைத்து
திட்டமுடன்கட்டி சீராகவையுமைந்தா
அந்தசொற்கேட்டு ஆணிமுத்துவீரையனும்
சந்தோஷங்கொண்டு தானெழுந்துஅந்நேரம்
குட்டியாட்டுத்தோலை கொற்றவனுந்தானெடுத்து
அட்டைக்குவளமான அட்டையுந்தான்சேர்த்து
அதற்கேற்றமேல்வாறு அடைவாகத்தானறுத்து
ஒருநாழிகைக்குள்ளே யுச்சிதமாய்மிதியடியும்
கட்டியங்கேதானெடுத்து காரணனுமப்போது
தகப்பன்தனையழைத்து தான்கொடுத்தார்வீரையனும்
பார்த்துமனமகிழ்ந்து பாலகனைக்கொண்டாடி
மாதிகனும்வாங்கி மனமகிழ்ந்துவைத்திருந்தான்

**பொம்மியம்மாளை வீட்டிற்கழைத்துக்கொள்ளல்**

முப்பதுநாளும் முடிந்ததுகாணப்போது
பொழுதுவிடிந்தபின்பு பொம்மணநாய்க்கனுமே

பொம்மியம்மாளுக்கு பொருந்திசடங்குசெய்ய
கூட்டத்துடனே குடிசைக்குத்தான்வந்து
குடிசைபிடுங்கி கொளுத்திவிட்டபிற்பாடு
பொம்மியம்மாள்தன்னை பொங்கமுடன்நீராடி
கூறையுடுத்திக் கோர்வைப்பணிபூட்டி
கொப்பிட்டுவாளிட்டு குந்தளப்பொன்வோலையிட்டு
கருங்குருவிவாலது கண்ணிற்குமைதீட்டி
நெற்றியிற்றிலகமதை நேராகத்தானுமிட்டு
உட்கழுத்துத்தாலி யுயர்த்தியுள்ளகல்லிழைத்து
கட்டுவர்க்கந்தன்னாலே கழுத்திற்சரமணிந்து
மோகனமாலை முத்தாபரணமின்ன
மார்பில்பதக்கம் வகையுடனேதாணிந்து
கடகஞ்சரிபவளம் கைவளையல்தானணிந்து
பத்துவிரலுக்கும் பசும்பொன்னாற்காலாழி
இடுப்பிலொட்டியாணம் இசைவாகத்தான்பூட்டி
காலாழிபீலாழி கனத்தசிலம்பணிந்து
பாடகம்தண்டை பாதரசம்பூட்டி
வங்கிதலைசாமான் வயிரத்தால்மார்பதக்கம்
பூணாரமெல்லாம் பூட்டிவலங்கரித்தார்
அந்தநல்லவேளையிலே யானதொருமாதிகனும்
மிதியடியைத்தானெடுத்து விரைவாகக்கொண்டுவந்தான்
வந்ததொருபொம்மணனும் அன்பாய்மிதியடியை
பொம்மியம்மாளுக்கும் புகழ்ச்சியாய்த்தான்கொடுத்தான்
மிதியடியைத்தான்பார்த்து வேலனையகண்ணாளும்
மதுரைவேலையென்று மனங்குளிர்ந்தாளப்போது
தொட்டியத்துசக்கிலியர் துரிசாகக்கொம்பூத
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எருதுமேல்நகாரு எட்டுதிசையதிர
புள்ளாங்குழலூதப் பேரிகையடித்துவர
நாதசுரமேளம் நாட்டியங்களாடிவர
பதினெட்டுமேளம் பாங்குடனேதாஞெலிக்க
வெடிசத்தமெங்கும் வேணபடிதானதிர
கட்டியர்களெச்சரிக்க காவல்கொண்டாடிவர
வாராளாம்பொம்மியம்மாள் வர்னமணிமாளிகைக்கு
ஆலாத்திசுற்றும்பெண்கள் அன்னம்போல்நடந்துவர
பொம்மியம்மாள்தனக்குப் பொருந்ததிருஷ்டிகழிக்க

3

முத்தாலே ஆலாத்தி மூவாயிரங்கோடி
மாணிக்க ஆலாத்தி வகைவகையாய்த்தானெடுத்து
திருஷ்டிகழித்தார்கள் தீங்கெல்லாம்விட்டோட
கட்டியங்கூற கவரிபணிவீச
தங்கைநல்லாள்பொம்மி மாளிகையினுட்புகுந்தார்
அந்நேரவேளையிலே யானதொருபொம்மணனும்
தையல்நல்லாளுக்குச் சடங்குசெய்யவேணுமென்று
வேதப்பிராமணரை விதியுடனேதானழைத்து
நல்லதினந்தானுவென்று நன்றாகப்பாருமென்றான்
சித்திரைமாதஞ் சிறந்தசிம்மலக்கினத்தில்
நல்லவேளையென்று நாலுபக்கங்கால்நாட்டி
சந்தனக்கால்நாட்டி சதுர்முகக்கால்நாட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்விரைபரப்பி
செண்பகப்பூவரும்பால் சிறக்கவேமாலைகட்டி
மெல்லிநல்லாள்தானிருக்க மலர்கட்டிதொங்கவிட்டு
பச்சைக்கிளியும் பசும்பொன்கலசமிட்டு
தூணுக்குத்தூணும் தூங்காவிளக்கெரிய
குத்துவிளக்கெரிய குடவிளக்குநின்றெரிய
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எக்காளமூத எங்கெங்கிடுகிடென்ன
பாளையப்பட்டிலுள்ள துரைராஜமன்னவரும்
துரைகள்துரைமக்கள் துரைராஜமன்னவரும்
மங்கிலியப்பெண்கள் மங்கையர்கள்கூட்டமுடன்
மாணிக்கமணவரையில் மங்கைதனைக்கூட்டிவந்து
வச்சிரத்தால்முக்காலி வரிசையாய்த்தான்போட்டு
பொம்மியரைக்கொண்டுவந்து பொங்கமுடனிறுத்தி
சாஸ்திரஞ்சொன்னபடி சதிராகத்தான்முடித்து
அன்னையும்பொம்மிதனை யரண்மனைக்குக்கொண்டுவந்தான்
வந்தவுறன்முறைக்கு வரிசையாய்பொம்மணனும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசியெல்லோர்க்கும்
பரிவுடனேதானும் பாக்கிலையுந்தான்கொடுத்தான்

**விருந்திடல்**

விருந்தளித்தார்கள் விசிதமாய்தொட்டியற்கு
ஆயிரங்கலச்சம்பா அடைவுடனேதான்வடித்து
பதின்கலப்பருப்பு பாங்குடனேதான்சமைத்து

வாழக்காய்பொரியல் வழுதலங்காய்புளிச்சமையல்
பச்சடியில்நூறுவகை பாற்குழம்புதான்சமைத்தார்
மோர்க்குழம்பு ஆமவடை முருங்கைப்பூகூட்டமுது
கீரையில்பத்துவிதம் கிரமமாய்தான்சமைத்து
பலவகைப்பதார்த்தங்கள் பண்பாகத்தான்சமைத்து
அதிரசம்பேணி அதிசயமாகச்சமைத்து
போளிசுகியம் பொங்கமுடன்தான்செய்து
இலட்டுஜிலேபி இலக்ஷணமாகச்சமைத்து
காராசேவுபூந்தி கனத்கற்கண்டுடனே
சர்க்கரையினுல்பதுமை சங்கமுடன்தான்செய்து
வடையப்பளமும் வகைவகையாய்தான்சமைத்து
இட்டிலிதோசை யினிப்புள்ளகாரமுடன்
அன்பாகத்தான்சமைத்து அளவிலாபலகாரமுடன்
வாழைப்பலாக்கனியும் வன்மையுள்ளமாங்கனியும்
தேனுடன்சர்க்கரையும் தெவிட்டவேதான்போட்டு
புத்துருக்குநெய்யும் பொங்கமுடன்தான்வார்த்து
பால்விட்டபாயாசமும் பத்துவிதந்தான்செய்து
இத்துடனேகூட ஏற்றகறிவகைகள்
வேணபடிசெய்து விதவிதமாய்த்தான்சமைத்து
பந்திபரிமாறி பாங்காய்விசாரித்து
உறன்முறையோரெல்லோரும் உண்டுபசியாறி
கைகாலலம்பிக் கனிவாயைக்கொப்பளித்து
வந்துஉட்கார்ந்தார்கள் வண்மையுள்ளபந்தலிலே
சந்தனமும்புஷ்பமும் தயவாயலங்கரித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகவேயளித்தார்
வால்மிளகுஏலக்காய் வன்மையுள்ளஜாதிக்காய்
ஜாபத்திரிகிராம்புடனே சம்பிரமமாய்த்தான்கொடுத்து
அருகிலிருந்து அனைவரையும்பூசித்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
மாதிகச்சின்னனும் வன்மையுள்ளவீரனுமே
சாதம்கறிவாங்கத் தான்வாராரந்நேரம்
பொம்மணநாய்க்கரும் பொறுமையுடனேபார்த்து
ஆரடிதாதிகளே அன்னம்படையுமென்றார்
படையுமென்றசத்தம் பைங்கிளியாள்தான்கேட்டு
ஆரென்றுசொல்லி அலண்டுயெழுந்திருந்தாள்
தாதியருமப்போது சக்கிலியனென்றுசொன்னர்

சாதங்கறியுடனே தட்டில்பரிமாறி
கொண்டுவாவென்று கூறலுற்ருளப்போது
தாதியருமுன்னடக்க தையலருங்கூடவந்து
மாதிகர்க்குப்பெண்ணரசி னரியமுதிட்டாள்
மதுரைநல்லவீரையனை மங்கையருந்தான்பார்த்தாள்
நல்லதென்றுசொல்லி நலமாயெழுந்திருந்தான்
தகப்பனுடன்கூட தன்மனைக்குப்போய்சேர்ந்து
நடுராத்திரிவீரையனும் நல்லணங்கைத்தானினைந்து
மைந்தனென்றுதான்வளர்த்த மாதிகர்க்குங்கூருமல்
பதினைந்துநாழிகையில் பள்ளியறைவிட்டு
சர்வாபரணமெல்லாந் தானணிந்தானப்போது
மாளிகையைவிட்டு வாருன்காணுவலுடன்
பொம்மிமேலாசைகொண்டு புறப்பட்டான்வீரனுமே
கொள்ளைகொண்டவீரனுமே கோட்டைக்குமுன்வந்து
அநுமார்லகுவெடுத்து அதிரக்குதித்தான்காண்
பத்துகட்டுவாசலையும் பாங்காகத்தான்கடந்து
பொம்மியற்குகாவலாய் பொம்மணனுமப்போது
தலைவாசல்முன்பாக சப்ரமஞ்சகட்டிலின்மேல்
உருவினகத்தியுட னுறங்கினுன்பொம்மணனும்
இத்தனைகட்டுதிட்ட மிருந்துநம்மைஎன்னசெய்வான்
என்றுசொல்லித்தான்சிரித்து ஏற்றமுள்ளவீரையனும்
ஈயைப்போல்வடிவெடுத்து இரப்பிலேபோய்நுழைந்தான்
மெல்லநுழைந்துபோய் மெல்லியரைத்தானெழுப்ப
தேன்மொழியாள்பொம்மி திடுக்கென்றெழுந்திருந்து
கணவனைக்கண்டவுடன் கன்னியரும்பூரித்தாள்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
இருவருந்தான்தழுவி யிருந்தார்கள்பஞ்சணையில்
தென்மதுரைவீரையனைத் தேன்மொழியுந்தான்பார்த்து
அங்கங்கேகாவல் ஆனதொருசேவகரும்
தொட்டியர்கள்காவல் துடுக்கர்தங்காவலங்கே
மாளிகையின்வாசலிலே மன்னனுனவென்தகப்பன்
உருவினகத்தியுடன் உன்மாமன்தானிருக்க
கோட்டைத்தலைவாசல் கொத்தலமுந்தான்கடந்து
இந்தநல்லகாவலிலே எப்படிநீர்வந்தீரென்ருள்
கேளடிபெண்மயிலே கிரிடிக்கிறதற்காக
ஏந்திழையேயுன்னைவிட்டு இருக்கேனரைநாழி

அரண்மனையில்நீயிருந்து அவ்விடத்தில்நானிருந்தால்
ஏகாந்தமெங்கேயடி இருவருக்கும்பெண்ணரசே
ஆகையினாலே ஆரணங்கேயுனைநினைந்து
கட்டுடன்காவல் கடந்துவந்தேனென்சமர்த்தால்

### மதுரைவீரனும் பொம்மியம்மாளும் திருச்சினாப்பள்ளிக்குப் புறப்படல்

வாருமடிபெண்ணே வையகத்திற்போய்பிழைப்போம்
தெற்கேஒருகோட்டை திருச்சினாப்பள்ளியென்று
இருக்குதடிபெண்மயிலே இருவரும்போவோமென்றான்
நல்லதென்றுசொல்லி நலமுள்ளமங்கையரும்
மாணிக்கபெட்டியை வகையுடனேதான்திறந்து
செலவுக்கோராயிரம்பொன் சீக்கிரமாய்த்தானெடுத்து
ஒற்றைக்கால்கூடாரம் உத்தமனுந்தானெடுத்து
அத்தனையுந்தானெடுத்து ஆரணங்குமன்னவனும்
போகவேணுமென்றுசொல்லி புறப்பட்டாரிருவருமாய்
கதவைத்திறந்தவுடன் கன்னிகையுங்காளையரும்
மாளிகையைவிட்டுதலை வாசலிலேவந்துநின்று
திறந்தகதவை சேரவேதான்மூடி
காளைதனையழைத்து காவலிருக்கச்செய்து
தாப்பாளும்பூட்டும் தப்பாமல்பூட்டிவிட்டு
என்றுசொல்லிமதுரை இதமாகநீரெடுத்து
மந்திரித்துபோட்டு மன்னவனுமப்போது
பொம்மணனேறும் புரவிதனையழைத்து
தங்கக்கடிவாளந் தாராளமாய்ப்பூட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னால்சீனிகட்டி
கூடாரத்தைமடித்து குதிரையின்மேல்போட்டு
பட்டாபெரியகத்தி பாங்குடனேதானெடுத்து
பொன்புரவிமேலே பொம்மியரைத்தூக்கிவைத்து
கடிவாளங்கைபிடித்து காரணனுமேறலுற்றான்
கோட்டைகடந்து கொள்ளைகொண்டமதுரையனும்
கொல்லிமலைகடந்து கோனேரியாறுவிட்டு
ஆமூர்வழியாக ஆற்றில்வந்துதானிறங்கி
நாட்டினார்கூடாரம் நட்டாற்றில்மதுரையனும்
பலகாரஞ்சாப்பிட்டு பள்ளிகொண்டாரிருவருமாய்
ஏகாந்தம்பேசியே இருக்குமந்தவேளையிலே

பொழுதுவிடிந்தது பொம்மணனுமப்போ
பட்டத்துபுரவியையும் பட்டத்துக்கத்தியையும்
காணுததினுலே கலக்கமுற்றன்னேரம்
பொம்மியம்மாளைப் புகழ்ச்சியாய்க்கூப்பிட்டு
பேசவில்லையென்று பேர்த்தெறிந்தானக்கதவை
பார்த்துமகளில்லையென்று பதறிவிழுந்தான்காண்
பொம்மியரைக்காணேமென்று புலம்பிவெளியில்வந்து
வேதியர்சொன்னதெல்லாம் மெய்யாச்சுதென்று
பட்டணத்திலுள்ள பரிசனங்களத்தனையும்
திக்குதிசைகளெல்லாம் தேடித்திரிகையிலே
மாதிக்கச்சின்னுனும் மகனையுங்காணேமென்று
எதிராகவந்தான்காண் எண்ணமற்றசக்கிலியன்
எல்லோரும்பார்க்க எடுத்துரைத்தானன்னேரம்
மாதிகன்மகனும் மங்கையரைக்கொண்டுசென்ருன்
என்றுசொல்லிநாய்க்கனுக் கெடுத்துரைத்தாரந்நேரம்

### மதுரைவீரன்மேல் பொம்மணன் படை யெடுத்தல்

சேனைகளைக்கூட்டி திரளாகப்போவதற்கு
பதினுயிரம்வெடிகாரர் பாங்குடனேகூட்டமிட்டார்
வளைதடிசக்கரங்கள் வகையுள்ளராணுவங்கள்
சேனைகளெல்லாந் திரளாகத்தான்கூட்டி
அந்தநல்லவேளையிலே ஆனதொருபொம்மணனும்
வாகுவலயமும் வளைதடிசக்கரமும்
வறியம்புநெறியம்பு ஈட்டியுங்கைபிடித்து
பஞ்சகல்யாணிப்புரவி பாங்காகக்கொண்டுவந்தார்
பொம்மணநாய்க்கன் புரவிதனிலேறி
தலையாரிமுன்னேபோகத் தனிப்பரியும்பின்தொடர்ந்து
சேனைவருவதினுல் செந்தூள்பறக்குதங்கே
தப்பட்டைகொம்பு தவில்முரசுதான்முழங்கி
யானையின்மேல்பேரிகை அதிர்ந்துமுழங்கிவர
வழியிலெதிராக வருவோரைக்கேட்கலுற்ருர்
ஒற்றைக்குதிரை ஒருபெண்ணுமாண்பிள்ளை
கண்டாயோயிவ்வழியில் கண்மணியேதம்பியரே
அப்போதுஆட்டிடையன் அவனசேதிதனை
வாருமையாசுவாமி வந்தவகைசொல்லுகிறேன்

கருங்கால்வழியாக கண்டேனொரு குதிரை
குதிரையின்மேலொரு கோதையரும்மன்னவனும்
இவர்களிரண்டுபேரும் இதமாகப்போகிறார்கள்
அந்தநல்லசேதிகளை அடைவாகத்தான்கேட்டு
பொம்மணனுமப்போது போகிறான்வேகமுடன்
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்குதப்போ
காவேரியாற்றில் கண்டானேகூடாரம்
அதிலிறங்கிச்சேனை அலைகொட்டிருக்கிறதை
கூடாரத்திலிருந்த கோதையரும்வெளியில்வந்து
வடக்குமுகம்பார்த்தாள் வருகின்றசேனையைத்தான்
அலறியேபோய்விழுந்தாள் ஆணிமுத்துவீரன்மேல்
என்னடிபெண்ணேயென்று எழுந்துவெளியில்வந்து
பார்த்தான்வடக்குமுகம் பறந்துவருஞ்சேனைதனை
கண்டுமந்தவீரையனும் கன்னிமனந்தேற்ற
கூடாரத்தின்மேல் கொள்ளைகொள்ளையென்றுசொல்லி
வந்துநிறைந்தார்கள் வந்தசேனையத்தனையும்
பதினாயிரம்பேர்கள் பாங்குடனே அம்புதொட்டு
கூவியதுபோல் கொடியம்புதானெடுத்து
வெட்டவேணுமென்று வீரையன்மேல்வாறார்கள்

## மதுரைவீரன் சண்டைக்குப் போகுதல்

கண்டுமேவீரையனுங் கடுங்கோபங்கொள்ளுதப்போ
மீசைதுடிக்குதப்போ வெகுகோபங்கொள்ளுதப்போ
ஏறினான்குதிரையின் மேல் எடுத்தான்பெரியகத்தி
மன்னவனேயுங்கள் மாமனொருத்தனையும்
வெட்டாமல்விட்டுவிட வேண்டுமென்றுதெண்டனிட்டாள்
பைங்கிளியேபெண்மயிலே படுகளத்திலொப்பாரி
உண்டாயித்தேசத்தி லுண்மையைச்சொல்லவந்தாய்
என்றுசொல்லிமதுரையனும் எதிராளிசேனையிலே
ஆனைத்திரளதனில் ஆளிவந்துபாய்ந்ததுபோல்
சேனைத்தளத்தில் சிறுவேங்கைபாய்ந்ததுபோல்
வந்துவளைத்தானும் மட்டற்றசேனைகளை
சேனைகளெல்லாந் திரளாகவோடியங்கே
மாண்டுமடிகிறது மன்னனதுசேனையெல்லாம்
முன்வீச்சுக்காயிரம்பேர் பின்வீச்சுக்காயிரம்பேர்
இறந்துமடியுதப்போ எண்ணிறந்தசேனையெல்லாம்

பொம்மியால்நம்முயிர்தான் போகுதென்றுசொல்வார்கள்
என்றுபுலம்பி இறந்துமடியுமப்போ
புஷ்பமாய்வந்து பொழியுதுகாணுண்டவன்மேல்
தொடர்ந்துபோய்வீரன் துடுக்கர்படையெல்லாம்
துண்டதுண்டமாகத் துணிந்தாராமப்போது
சாகீப்சலாமென்று தான்விழுந்தார்சோடிபடை
திருச்சிணப்பள்ளி தேசத்தையாளுகின்ற
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுராணுவமும்
கோட்டைக்கதவடைத்து கொத்தளத்தின்மேலிருந்து
வேடிக்கைபார்க்கிறார்கள் வேந்தன்படைத்தளமும்
சேனைத்தளங்களெல்லாஞ் சேதமாய்ப்போகுதென்று
மனதுகலங்கியப்போ மன்னவனுமேதுசொல்வான்
சக்கிலியன்தானுமிப்போ தலையறுத்தான்சேனைகளை
கூட்டப்படைகளெல்லாங் கொன்றுகருவறுத்தான்
நாம்போய்விழுந்து நறுக்குவோம்சக்கிலியை
என்றுநினைத்து ஏற்றமுள்ளபொம்மணனும்
புரவிதனிலேறி புறப்பட்டானப்போது
எதிர்கொண்டுவந்த எண்ணற்றமாமனைத்தான்
பார்த்தங்கேகடிந்து பதறிப்போய்தான்விழுந்து
மாமனென்றுபாராமல் வாளாலேவீசிவிட்டான்
மாமன்விழுந்தபின்பு மதுரைமகாமுனியும்
தொட்டியப்பய்ல்களைத்தான் துரத்திகருவறுத்து
கத்திவரிசைகளையெல்லாம் காவேரியிற்றுனலம்பி
கொள்ளைகொண்டவீரையனும் கூடாரந்தானேக்கி
குலுங்கநடைநடந்து குஞ்சிரிப்புகொண்டுவந்து
அடுத்தாரைக்காக்கும் ஆணிமுத்துவீரையனும்
வர்னமணிக்கூடாரம் வந்திருக்கும்வேளையிலே
ஏந்திழையுமப்போது என்தகப்பனெங்கேயென்றாள்
உன்தகப்பன்தானும் ஒக்கமடிந்தாண்டி
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளபொம்மியரும்
அலறியேபோல்விழுந்தாள் ஆனதொருபடுகளத்தில்
பொம்மண்ணன்மேல்விழுந்து புலம்பியழுகலுற்றாள்
என்னாலேஉங்களுயிர் எமலோகஞ்சேர்ந்ததோ
பாவிமகளாலே படுகளத்தில்மடிந்தீரோ
என்னைவிட்டுநீங்கள் இருந்தரசுஆளாமல்
சேனைத்தளத்துடனே சீக்கிரமாயாற்றில்வந்து



மடிந்தீரோமன்னர்களே மகாசேனையத்தனையும்
என்றுபுலம்பி ஏங்கியழுலுற்ருள்
மங்கையரைத்தானெடுத்து மார்புடனேதானணைத்து
அழுகிறதைத்தானமர்த்தி அந்நேரம்வீரையனும்
திருச்சினுப்பள்ளியிற்போய் சீக்கிரமாய்கட்டைகொண்டு
சந்தனக்கட்டையின்மேல் சதுராயெடுத்துவைத்து
நீர்கடனும்தீக்கடனும் நீதியுள்ளமாமனுக்கு
வரிசையுடனேமுடித்து வளமயிலும்வீரனுந்தான்
காவேரிதீர்த்தத்தில் கனமாகத்தான்குளித்து
மங்கையரும்வீரையனும் வந்தார்கள்கூடாரம்
சாதங்கறிவகைகள் சமைத்தாரேயந்நேரம்
படைத்தந்தசாதத்தை பரிவாகவீரனுண்டான்
பைங்கிளியைப்பார்த்து பசியாரும்பெண்ணேயென்ருன்
உண்டுபசியாறி உத்தமியாள்பொம்மியரும்
இருவருங்கூடி ஏாந்தமாயிருந்து
பாக்கிலைதாமருந்திப் பரிந்துவிளையாடி
என்னடிபொம்மியேநாம் இங்கிருக்கக்காரணமேன்
கூடாரந்தான்பிடுங்கி கோட்டைக்குச்சேர்வோமென்று
பொம்மியரும்வீரனுந்தான் புரவிதனிலேறி
திருச்சினுப்பள்ளிக்குச் சீக்கிரமாய்ப்போகையிலே

### மதுரைவீரன் விஜயரங்கனிடத்தில் சம்பளத்துக்குப் போயிருத்தல்

கோட்டைதலைவாசல் குறிக்காரர்தாமறிந்து
எந்தவூரென்று இதமாகத்தான்கேட்டார்
வடக்கேயிருந்து வருகிறேமென்றுசொல்லி
சேவகருமில்லாமல் செம்மையாயிங்குவந்தோம்
நல்லதென்றுசொல்லி ராஜனுக்கறிக்கையிட
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுகேட்டு
வந்ததொருசேவகனை வாசல்தடையில்லாமல்
கூட்டியிங்கேவாருமென்று கொப்பெனவேயுரைத்தார்
வீரனதைக்கேட்டு விருப்பமுடனேநடந்தான்
பொம்மியற்குத்தான்விடுதி பொங்கமுடனேயமர்த்தி
விடுதியில்விட்டு வேந்தனிடந்தான்போனன்
கண்டுதுரைராஜாவும் காரணனைத்தான்பார்த்து
வாருங்களென்றுசொல்லி வரிசையுடனிருத்தி
எந்தவூரெங்குவந்தீர் ஏதுவிஷயஞ்சொல்லுமென்ருர்

வட திசையில் நானிருந்து வந்தேனையாவுங்களண்டை
ஆன்தோருசேவகத்தை யடைவாகத்தந்தீராகில்
அரண்மனைவாசலிலே அசையாமற்காத்திருப்பேன்
என்றுசொன்னவீரனுக்கு ஏத்த முள்ளராஜாவும்
என்னதாண்சம்பளம் இயம்பென்றுதானகேட்க
திங்களுக்கோராயிரம்பொன் திரமாகத்தரவேணும்
நல்லதென்றுசொல்லி நாயக்கனுஞ்சம்மதித்து
ஆயிரஞ்சேவர்க்கு அணித்தலைவனாகயிரு
உச்சிதமான உடுப்புகள்தான்கொடுத்தும்
இந்தப்படிவீர னிருக்குமந்தவேளையிலே
யானையின்மேலேறி அலங்கஞ்சுற்றிவருகிறதும்
குதிரையின்மேலேறி கோட்டைசுற்றிவருகிறதும்
ஆருமறியாமல் அரண்மனைக்குப்போகிறதும்
வேடங்கள்பூண்டு வீதிசுற்றிவருகிறதும்
பதிவிரதைபெண்களை பதியைக்குலைக்கிறதும்
ஸ்ரீரங்கநாதரைச் சேவித்துவருகிறதும்
வேட்டைகளாடி வீடுவந்துசேர்கிறதும்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராஜன்மெச்சும்
தேசக்குறிக்காரர் தேசுகிருஷ்ணப்பனுந்தான்
பிள்ளைகளில்லையென்று பெருந்தவசுதானிருக்க
மாயனருளாலே வந்துதித்தாள்மங்கையரும்
புத்திரிபிறந்தவுடன் பூரித்துதானிருந்து
வேறோரரண்மனையை விசித்திரமாய்க்கட்டிவைத்து
மங்கையந்தஅரண்மனையில் மகிழ்வாகத்தானிருந்தாள்
அரண்மனைக்குமுன்பாக ஆணிமுத்துவீரனுந்தான்
வருகிறபோது மருந்துபொடிவாசனையும்
வீசுவதைக்கண்டு வேலனையகண்ணாளும்
ஆரென்றுசொல்லி அவளெட்டித்தான்பார்த்தாள்
கன்னியிளமயிலைக் கண்டவுடன்வீரனுமே
ஆகட்டுமென்றுசொல்லி அதட்டியேதானடந்தான்
கண்டாளேவீரன்றனை களிப்புடனேசொக்கியவள்
மோகித்திருந்து முத்தையன்மேலிச்சைகொண்டு
அன்னம்விரும்பாமல் அடைக்காயருந்தாமல்
எண்ணங்கொண்டேமிகவும் ஏங்கியவளிருக்க
பொம்மியரும்அப்போது போசனங்கள்தான்படைக்க

சாப்பிட்டிளைப்பாறி தனிச்சிங்கமதுரையனும்
நஞ்சுதின்றுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
பகற்காலந்தான்பார்த்து பாவையரண்மனைக்கு
படுக்கையைவிட்டெழுந்து பாவையரண்மனைக்கு
ஆசாரவாசல் அரண்மனைவாசல்கடந்து
ஏறிமதில்கடந்து ஏந்திழையிடத்தில்வந்து
எதிராகரவீனுந்தான் இசைவாகநிற்கையிலே
நாய்க்கர்மகள்தானும் நல்லநித்திரைசெய்கையிலே
மதுரைவீரனணிந்த வாடை யவள்மேல்வீச
பள்ளிகொண்டுதானிருக்கும் பைங்கிளியாள்தான்பார்த்து
இந்தப்பொடிவாசனை ஏதுகாணென்றுசொல்லி
காலையில்கண்ட காரணனும்வந்தானோ
யாரென்றுசொல்லி யறிந்துவரவேணுமென்று
பஞ்சணைமெத்தைவிட்டு பசுங்கிளியுந்தானெழுந்து
மாணிக்கப்பொற்கதவை மங்கையரும்போய்திறந்து
பார்க்குமளவில் பராக்கிரமவீரனிற்க
கண்டுமனமகிழ்ந்து கன்னிகையுமப்போது
மணவாளன்நிற்கிறதை மங்கையவள்தான்பார்த்து
மயங்கியேதான்விழுந்தாள் மன்னவனுமப்போது
மாணிக்கக்கையாலே மங்கையரைத்தானெடுத்து
கச்சைப்புரமையெடுத்துக் கன்னியர்க்குத்தானுமிட
சோகந்தெளிந்து தோகையருங்கூறலுற்றாள்
வாருங்கள்ராஜாவே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லித்தானு மேந்திழையாளருகில்வந்தாள்
கட்டியணைத்தான் கனிவாயைமுத்தமிட்டான்
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதாமருந்தி
சிரித்துவிளையாடி தேன்மொழியைத்தான்சேர்ந்து
தீராதஆவலெல்லாம் தீர்த்தானபிற்பாடு
மங்கையருமப்போது மகிழ்ச்சியுடன்தானெழுந்து
வீரையர்க்குத்தானும் வேண்டுமென்றபலகாரம்
அதிரசமுந்தேன்குழலும் ஆனசுகிவடையும்
தீவுச்சரக்குத் தேசத்துசாராயம்
அத்தனையுங்கொண்டுவந்து ஆண்டவர்க்குமுன்னேவைத்தாள்
இத்தனைநேரம் இளைப்புடனேநீரிருந்தீர்
பசியாறுமென்றுசொல்லி பைங்கிளியுந்தான்கூற
தென்மதுரைதானுஞ் சீக்கிரமாய்த்தான்புசித்து

அடைக்காயுர் வெற்றிலையும் அன்புடனேதாமருந்தி
வாருமடிபெண்ணே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லிவீரையனும் ஏந்திழையுங்கேட்கலுற்ருள்
பெண்மயிலேநானும் போகிறேனரண்மனைக்கு
என்றுசொல்லித்தானு எழுந்துநின்ருரப்போது
மன்னன்முகம்நோக்கி மங்கையருமேகனிவாய்
எப்போதுவருவீர்கா ணென்றுசொல்லிக்கேட்கலுற்ருள்
மாதமொருதினந்தான் மங்கையரேநான்வருவேன்
என்றுசொல்லிவீரையனும் இதமாய்வெளியில்வந்து
சுத்தாலேயேறி துருசாய்குதித்திறங்கி
ஆணிமுத்துவீரையனும் அசைந்துநடைநடந்து
வருகிருன்பொம்மியுட மாணிக்கமாளிகைக்கு
வீரையன்தானும் வீடுவந்துசேர்ந்தானும்
பொம்மியருங்கண்டு பொங்கியேகோபங்கொண்டு
இந்நேரமட்டும் எங்கேபோய்வந்தீர்காண்
முறையும்வரிசையில்லை மூர்க்கமுள்ளமன்னவனே
பெண்டுகளைக்கண்டால் பேய்போல்பறக்கிறீர்காண்
பாதகரேதானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
என்றுசொல்லிபொம்மி எடுத்தெறிந்துபேசியபின்
ஏங்கிமுகம்வாடி எண்ணியழுகலுற்ருன்
தண்ணிவெறிக்கார தனஞ்செயனுந்தானுமப்போ
இத்தனைசலிப்பேண்டி ஏந்திழையேபொம்மியென்று
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
உன்னைவிட்டுதானு மொருவர்முகம்பார்த்ததில்லை
பைங்கிளியேயென்று பரவசமாய்ச்சொல்லியபின்
மனமுந்தெளிந்துமப்போ மங்கையருந்தானெழுந்து
சாதங்கறிவகைகள் தயவாகத்தான்படைத்தாள்
சாப்பிட்டிளைப்பாறி தக்கோலந்தானருந்தி
சிரித்துவிளையாடி சீராகத்தானிருந்தார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்மகாராஜாவின்
கட்டளைப்படிக்குநிதம் காத்திருக்கும்வேளையிலே
மன்னர்துரைராஜனுக்கு மதுரையிலேதானிருந்து
வெள்ளைத்தடிக்காரர் வீருனஉத்தரங்கள்
தருசாகத்தானெடுத்து தூதுவர்களப்போது
ஆசாரவாசல்வந்து அடைவுடனேகைதொழுது
உத்தரவைத்தான்கொடுத்தார் உத்தமனுந்தான்வரவே

வந்ததொருஉத்தரத்தை வாசித்துப்பாருமென்றார்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
வைகைநதியும் வற்றாதபொய்கைகளும்
சொக்கரிட சந்நிதியும் சொர்னமணிகோபுரமும்
மீனாக்ஷிசந்நிதியும் வெண்முத்தால்கோபுரமும்
புஷ்பவனமும் பொன்தாமரைக்குளமும்
இப்படியாயிருக்கும் எண்ணமற்றராஜ்ஜியத்தில்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுகள்ளரெல்லாம்
நாட்டிலுள்ளகள்ளரெல்லாம் நலமாகக்கூட்டமிட்டு
அழகர்தன்கோவிலுக்கு யாரொருவர்போனாலும்
கண்டவிடங்களெல்லாங் கள்ளர்வுபத்திரவத்தால்
உழவுநடவுமில்லை உபத்திரவந்தன்னிலே
கொல்லரிடமுடிப்புக் கொடுக்கபயமாச்சு
இப்படியாகக்கள்ளர் இடக்குகள்செய்கிறார்கள்
என்றுசொல்லிநாய்க்க ரெழுதிவிட்டாருத்தரத்தை
விஜயரங்கசொக்கலிங்கவேந்தனுந்தான்கேட்டு
சபையிலுள்ளபேரையெல்லாம் தானும்முகம்பார்த்து
ஆர்போவீரென்றே அடைவுடனேகேட்டதற்கு
இராஜன்முகம்நோக்கி நன்றாகயெடுத்துரைப்பார்
அப்படிக்கொத்தகள்ளர் அஞ்சாதநாட்டாரை
வெட்டிச்சருவறுத்து விருதுபெற்றுவாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடிசொல்லுகிறோம்
ஆயிரம்பொன்சேர்வை யானதொருவீரையனும்
சேனைகள்தலங்கள்கூட்டித் தெற்கேயனுப்பிவைத்தால்
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடுகவேதானறுத்து
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளுமணிவீரையனும்
என்றுசொல்லியெல்லோரும் இதமாயுரைக்கலுற்றார்
அந்தநல்லசேதி அடைவுடனேதான்கேட்டு
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராஜாவும்
வீரையனைத்தானழைத்து வெகுமதிதான்கொடுத்து
ஐயாயிரம்சேனைதளம் அடைவுடனேதான்கூட்டி
தந்தார்சிவிகை தான்கொடுத்தான்வீரையற்கு
வெள்ளைக்குடையும் வெண்சாமரமுடனே
பதினெட்டுமேளவாத்தியம் பாங்குடனேதான்கொடுத்து
பஞ்சவர்னடால்விருது பட்டாவுந்தான்கொடுத்தார்
அடைக்காயுவெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து

போய்வாருமென்றுசொல்லி போற்றிவிடைகொடுத்து
அனுக்கிரகம்பெற்றுக்கொண்டு ஆணிமுத்துவீரையனும்
ஏறுனர்சிவிகையின்மேல் எண்ணமற்றசேனையுடன்
வெள்ளைக்குடைபிடிக்க வெண்சாமரம்வீச
பொம்மியரண்மனைக்குப் பொங்கமுடன்வாருர்காண்
கன்னியரும்பார்த்துக் களிப்பெய்துகொண்டாடி
என்றுமடையாத வெக்களிப்புதானடைந்து
பூரித்துபொம்மியரும் பொங்கமுடன்வீற்றிருந்தாள்
ஆணிமுத்துவீரையனும் அரண்மனையில்வந்திருந்தான்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசனுந்தான்
உக்கிரானந்தான்திறந்து உத்தமனுர்வீரையற்கு
சேனைத்தளத்திற்குஞ் செல்லுமெனறதிரவியமும்
முத்துக்கடுக்கனென்றும் மோகனமாலையொன்றும்
சாளுவைகள்ரெண்டு தார்வேந்தன்தானெடுத்து
கொல்லர்கையில்கொடுத்துக் குணமுள்ளவீரனிடம்
கொண்டுவந்துகொல்லர் கொடுத்தார்காண்வீரையற்கு
வீரையனுமப்போது வெகுவாய்மனங்குளிர்ந்து
கொல்லரையனுப்பிவிட்டுக் குணமுள்ளவீரையனும்
கணக்கரைத்தானழைத்து கடுகவுரைக்கலுற்ருர்
சேனைதளத்துக்கெல்லாஞ் செலவுக்குத்தான்கொடென்ருர்
ஐந்துலக்ஷம்பொன்னெடுத் தவர்கையிலேகொடுத்து
கணக்கெழுதிவாருமென்று காரணனுமந்நேரம்
சம்பங்கியெண்ணைகொண்டு தலைமுழுகிமயிராற்றி
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்தான்முடித்து
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
புனுகுசவ்வாது புண்ணியனுமேல்பூசி
கண்டவர்கள்தான்மகிழ கஸ்தூரிபொட்டுமிட்டு
போஜமண்டபத்தே போய்புகுந்தான்வீரையனும்
சாதங்கறிவகையுந் தான்படைத்தாள்பொம்மியரும்
சாப்பிட்டிளைப்பாறி சரசமுற்றவீரையனும்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தானருந்தி
வாருமடிபெண்ணே வார்த்தைசொல்லக்கேளுமினி
மதுரையிற்கள்ளர்வந்து வழியிழுக்குபண்ணுகிருர்
என்றுசொல்லிநாயக்க ரிதமுடனேதானழைத்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தார்

ஆகையினாலே ஆரணங்கேநீதானும்
பயணமதாகிப் புறப்படுநீபைங்கிளியே
என்றுசொல்லிவீரையனும் எழுந்திருந்துஅந்நேரம்
பொம்மியருங்கூட பெருமையுடன்போகலுற்றாள்
சதுரங்கசேனையெனும் தளங்களனைவோரும்
பயணமதாகிப் பார்மீதில்முழக்கமிட்டார்
பல்லக்கின்மேலே பைங்கிளியுந்தானேற
ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி
படைக்குநல்லபார்த்தனைப்போல் பறந்தாராம்தென்மதுரை
மதுரைதிசைநோக்கி மங்கம்மாள்சாலைவழி
ஆனையின்மேல்பேரிகை யதிரமுழங்கிவர
குதிரையின்மேல்டங்கா கூடமுழங்கிவர
தம்பட்டஞ்சொர்ப்பு தவில்மூாசுதானறைய
பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாசூழ்ந்துவர
புண்ணியனார்வீரையற்குப் பூச்சக்கரகுடைநிழற்ற
இருபுறமும்வெண்சாமரம் யின்பமுடன்வீசிவர
கட்டியங்கள்கூற கவிவாணாபாடிவர
நடந்தான்காண்தென்திசையில் நாலுதிக்குந்தானதிர
சேனைவருகிறதும் செந்தூள்பறக்கிறதும்
காடுமலைகடந்து கரியதொருசோலைவிட்டு
சில்லென்றநாடுவிட்டுச் செடிமலையுந்தான்கடந்து
மணப்பாரைவழிதனிலே வந்தடித்தார்கூடாராம்
கூடாரந்தானடித்து கோட்டைசலாதிவிட்டு
வீரையனும்வந்து விடுதியிற்றங்கினபின்
பொம்மியரும்வீரையனும் பொங்கமுடன்தானிருந்தார்
தேசத்திலுள்ள திரள்மன்னரத்தனையும்
பாளையக்காரர் படைமன்னர்வீரருமாய்
வீரையனைக்காண வெகுமதியுந்தானெடுத்து
வந்துமேகண்டு வணங்கியேதெண்டனிட்டு
ஆரென்றுசொல்லி அன்பாகத்தான்கேட்டார்
பாளையக்காரனென்று பாங்குடனேசொல்லையிலே
எங்குவந்தீரென்று இதமுடனேதான்கேட்க
கள்ளருபத்திரங்கள் கனமாயிருக்குதென்று
அஞ்சாதிருங்களென்று ஆதரவுசொல்லையிலே
பாளையங்களெல்லாம் பசியாறியிறங்கினபின்
மணப்பாறைசுப்பையனு மங்கபதிநாய்க்கரும்

வீரையனை வந்துகண்டு வேந்தர்களுமப்போது
ஆணிமுத்துவீரையற்கு ஆனதொருராணுவுக்கும்
அரிசிப்பருப்புடனே ஆனபதார்த்தங்களுடன்
வீரையற்கும்பொம்மியற்கும் விருந்துசமைற்தார்கள்
பொம்மியரும்மதுரையனும் பொங்கமுடன் தான்புசித்து
சாப்பிட்டிளைப்பாறித் தாம்பூலந்தாமருந்தி
பள்ளிகொண்டாரிருவருமாய் பாங்கானமெத்தையிலே
கங்குல்விடிந்தவுடன் கதிரோனும்வந்துதித்தான்
பயணமென்றுசொல்லி பாரசின்னமுதலுற்றார்
தென்திசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகையிலே
வேகமாய்வருகிறது வீரையன்சேனையென்று
தோராதலக்கையனுந் தும்பிக்கைபூச்சியனும்
இரண்டுதுரைமாரும் ஏற்றமுள்ளராணுவமுடன்
மாம்பூண்டுசோலையிலே வந்துயெதிரேநின்று
கைகுவித்துதெண்டனிட்டு கட்டளைக்குத்தாமிருந்தார்
வீரையனுமப்போது விரைவாகத்தானழைத்து
எங்குயிறங்கலாமென்றுசொல்லித்தான்கேட்டார்
அடியேங்களுங்க ளறிந்தமட்டுஞ்சொல்லுகிறோம்
துவரங்குறிச்சிக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தால்
தண்ணீர்சௌக்கியமுஞ் சாலைநல்லதோப்புகளும்
பேட்டைநல்லசாவடியும் பெரியகடைத்தெருவும்
ஊருக்குமேற்கே உயர்ந்தகிராமமுண்டு
பாளையந்தானிறங்கப் பதிவானவிடமுண்டு
என்றுசொல்லியப்போது ஏற்றமுடன்தானுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தான்காண்வீரையனும்
பாளையப்பட்டார் பாதைகொண்டுகொட்டலுற்றார்
சேனைப்படைத்தளமும் தீர்க்கமுள்ளவீரையனும்
துவரங்குறிச்சிக்குத் துருசாய்ப்போய்ச்சேர்ந்தார்
ஊருக்குத்தெற்கே வுயர்ந்திருக்கும்மேட்டின்மேல்
அனுமந்தகூடாரம் அடைவாகத்தானடித்தார்
கோட்டைசலாதிவிட்டு கொள்ளைகொண்டவீரையனும்
விடுதியில்தானுமப்போ விருப்பாகத்தானிருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆனதொருலக்கையனும்
தும்பிக்கைபூச்சியனுந் துரிதமுடன்வீரையற்கு
விதவிதமாய்எலுப்பைகள் விபரமாயனுப்பலுற்றார்
நெய்க்குடமுந்தயிர்க்குடமும் நேரானபாற்குடமும்

ஆட்டுக்கிடாக்களு மடைவானபன்றிகளும்
கோழியுடன்காய்கறியும் கொள்ளைகொண்டவீரையற்கு
அத்தனையுமாள்பேரி லன்பாயெடுப்பித்து
எடுத்தங்கேசென்றிவற்றை எதிராகத்தான்வைத்து
இலக்கையனுர் பூச்சியனும் இசைவாகக்கைதொழுதார்
கூட வேகைதொழுது குணமுள்ளவீரையனும்
வாருமென்றுசொல்லி வரிசையுடனேயழைத்து
இருவர்துரைமக்களுக்கு மின்பமொடுவீரையனும்
ஆளுக்கோர்சாலுவை அன்பாய்பரிசளித்து
இனிதாயுபசரித்து இருங்களென்றுவார்த்தைசொல்லி
அகங்குளிர்ந்துதுரைமக்க ளமைதியுடனங்கிருந்து
வீரையற்கும்பொம்மியற்கும் மேலானவிருந்துசெய்ய
சம்பாவரிசிகொண்டு சமைத்தார்கள்காய்கறிகள்
ஆட்டுக்கறிகள் ஆனபலகாரமுடன்
அளவில்லாக்கறிகள் அதிகசுவையாய்ச்சமைத்தேன்
பாவையற்கும்வீரனுக்கும் படைத்தார்களன்னம்பல
உண்டுபசியாறி உட்கார்ந்திளைப்பாறி
தாம்பூலந்தான்தரித்துச் சயனித்தார்பூவணைமேல்
பூச்சையனும்லக்கையனும் பொழுதுவிடியுமட்டும்
கண்ணிணையிமைகாப்பதுபோற் கார்த்திருந்தார்கடிதாக
அன்பர்வினைபோல் அகலவிருட்கூட்டம்
பச்சையிலைமேற் பரிதியும்வந்துதித்தான்
தூக்கமுழித்துத் திடுக்கென்றெழுந்திருந்து
தந்தந்துலக்கித் தடாகத்தில்நீராடிச்
சிவசிவாவென்று திருநீறுகாப்புமிட்டு
வண்டலத்துலுக்கரைப்போல் வடிவுள்ளபாகைகட்டி
அங்கிங்சான்தொட்டு அடைவுடனேகச்சைகட்டி
பதினெட்டுஆயுதமும் பாங்குடனேதான்பிடித்து
கூடாரந்தான்பிடுங்கி கொள்ளைகொண்டவீரனுமே
ஏறினுர்வாசியின்மேல் எடுத்தார்பெருங்குடையை
பயணம்புறப்பட்டார் பரிவாகத்தன்னுேடு
ஊதினுர்சின்னம் உலகமெல்லாந்தானதிர
வீரன்தன்சேனை வெகுவாய்வருகுதுகாண்
நத்தத்துலிங்கையனும் நாழிகையிற்குன்கேட்டு
வீடுமெழுகி விருப்பமுடன்கோலமிட்டு
தோரணங்கட்டி சுபகோலந்தானுமிட்டு

வீரையற்கும்பொம்மியற்கும் விடுதிலயங்கரித்து
வீதிக்குவீதி விதமாகப்பந்தலிட்டு
படியரசியாவர்க்கும் பாங்குடனேதான்கொடுத்து
அடிபணிந்துவீரனுக்கு அடைவுடனேதெண்டனிட்டார்
கண்டுமனமகிழ்ந்து கனப்பிரியமுண்டாகி
வாருமென்றுசொல்லி வாஞ்சையுடன்தானழைத்து
மோகனமாலையொன்றும் முத்துக்கடுக்கனென்றும்
வெகுமதியாய்க்கொடுக்க வீரையனுமப்போது
நத்தத்துவீதியிலே நலமாகபோயிறங்கி
சந்தோஷப்பட்டுத் தனஞ்செயனும்வீற்றிருந்தான்
நத்தத்துலிங்கையனும் நல்லவிருந்துதான்செய்தான்
பொல்லாததரித்திரமாம் பின்னிரவுபோனவுடன்
நல்லகம்பத்தென்னும் நடுமலராள்வந்துதிக்கும்
மற்றநாள்காலையிலே மன்னவனெழுந்திருந்து
தந்தசுத்திசெய்து தானணிந்தான்வெண்ணீறு
பாளையத்தைஎச்சரித்தான் படைமுரசுதான்திறந்து
மதுரையைநோக்கி மனமகிழ்ந்துசெல்கையிலே
சதுரங்கசேனைகளும் சதுராகத்தானடந்து
காடுமலைகடந்து கடியவனங்கடந்து
திருமலைநாய்க்கரிடச் சீமைதனைத்தொடர்ந்து
வைகைக்கரையோரம் வந்திறங்கியப்போது
அண்டமுகடதிர அடித்தார்கள்கூடாரம்
பொம்மியருந்தானும் பொங்கமுடன்வீற்றிருந்தார்
கூடாரம்வந்தபின்பு கோட்டைத்தலையாரி
திருமலைநாய்க்கன்முன் திடீரென்றுஓடிவந்து
வடக்கேயிருந்து வருகுதையாசேனைதளம்
மாற்றான்படையோ மறுமன்னர்தன்படையோ
என்றுசொல்லித்தலையாரி இணக்கமாகத்தானின்றான்
திருமலைநாய்க்கரும் சேதிதனைக்கேட்டு
ஆராளுலென்ன ஆகட்டுமென்றுசொல்லி
அருகாகபிராமணரை அன்பாகத்தானழைத்து
ஆரென்றுசொல்லி அறிந்துமெள்ளவாருமென்றார்
அப்போதேவேதியரும் ஆண்சிங்கவீரனிடம்
போனார்கள்சேதிதனைப் பூராயமாய்த்தெரிந்து
வேதியரைத்தானழைத்து வீரனுஞ்சொல்லலுற்றார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தரெனையழைத்து

மதுரைக்கும்சென்று வண்டரெனுங்கள்ளர்களை
மடக்கிவாவென்று மதித்துயெனையனுப்ப
ஆகையினுலேயிங்கு அடைவுடனேவந்தேனென்ருர்
சீக்கிரமாயுத்தரத்தை திருமலைநாய்க்கன்முன்
சொன்ஞர்களந்நேரம் துரைநாய்க்கர்தான்கேட்டு
வீரனுக்குவேண்டும் விடுதியெல்லாமமைத்து
வாசல்பிரதானி வரிசைபெற்றசாம்புவனை
எதிராகப்போய்நின்று யேந்தலெனும்வீரனைத்தான்
அழைத்துடனேவாருமென்று ஆக்கியாபித்தேயனுப்ப
சாம்புவனுமப்போது தார்வேந்தன்சொற்கேட்டு
எழுந்திருந்துவாசியின்மே லேறிப்போனுனுடனே
குதிரைப்பரிவாரங் கோடிதளம்பின்ருெடர
பதினெட்டுமேளம் பண்பாயறைந்துவர
வெள்ளைத்துகில்விசிரி விதமுடனேதானடைந்தான்
சேனுபதியுடனே சேனைதளம்வருகுதென்று
வீரனுமப்போது வெகுவாய்மனமகிழ்ந்து
ஆனையின்வுதவிதான் அழகாகவேயியற்றி
மத்தகஜந்தொட்டு மகாவீரன்பொம்மியரும்
ஏறியுட்கார்ந்து யினிதாய்வழிநடக்க
ஆணிமுத்துவீரனுமே யரண்மனையில்வந்திறங்க
சம்பங்கியெண்ணையால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் குடுமிகட்டச்சிக்கறுத்து
சீரானநெற்றிதனில் திருநீறுதானணிந்து
கெந்தமுங்கஸ்தூரி கீழ்மார்புதனில்
கட்டுவர்க்கந்தானணிந்து காரணனுமப்போது
அறுசுவையோடன்ன மருந்திளைப்பாறி
ஏலம்லவங்கமுடன் இளம்வெற்றிலைப்பாக்கும்
தரித்துவிளையாடி சரசபொம்மியைப்பார்த்து
வாருமடிபெண்ணே ஒருவார்த்தைசொல்லக்கேளுமடி
கள்ளரைக்கொல்ல கட்டளைகளிட்டாரடி
திருமலைநாய்க்கரது தெரிசனஞ்செய்வதற்கு
போய்வாரேனென்று பொன்பல்லக்கேறிப்போய்
திருமலைநாய்க்கருந்தான் சிறப்பாய்கொலுவிருக்கும்
ஆசாரவாசல்வழி அழகாகத்தான்கடந்து
பல்லக்குவிட்டிறங்கி பாராளும்வீரனுந்தான்
திருமலைநாய்க்கரைத்தான் சேவித்துக்கொண்டுநின்ருன்

கூடவேநாய்க்கருந்தான் கும்பிட்டுதானெழுந்து
பக்கமிருந்துகொண்டு பண்பாகவார்த்தைசொல்லி
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
மதுரைக்கடைத்தெருவை வந்துமெள்ளகொள்ளையிட்டு
தாலிமுதல்சேலையெல்லாந் தாங்கள்பறிப்பதனல்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராஜனுக்கு
எழுதிலிட்டபடியே யியற்கையுள்ளராஜனுமே
உம்மையனுப்பினதால் உத்தமனேநீர்வந்தீர்
கள்ளர்களங்கள் கருவையறுத்துவாரும்
என்றுநாய்க்கன்சொல்ல இணங்கியேவீரனுமே
பக்ஷணத்திலே பக்ஷமில்லாக்கள்ளரைத்தான்
வெட்டிக்கருவறுத்து வெற்றிகொண்டுவாறேனென்ருன்
நாய்க்கரதுகேட்டு நன்ருய்மனங்குளிர்ந்து
வீரனுக்குதக்க வெகுமதிகளைக்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
அரண்மனைக்குப்போவென் றனுப்பினர்வீரனைத்தான்
அரண்மனையில்வீரனுந்தா னடைவுடனேவீற்றிருந்தார்
அன்றிரவுநீங்கி ஆதித்தன்வந்துதித்தான்
வீரனெழுந்திருந்து விடியக்காலக்கடலை
எல்லாமுடித்துநக ரெங்குவுலாத்திவந்து
சாப்பிட்டிளைப்பாறிச் சாமிதுலைவீரனுந்தான்
சாயங்காலதீவட்டி தான்போட்டுக்கொண்டுமவன்
சொக்கரிடசந்நிதிக்குத் துருசாகத்தானேக்கி
தீபாராதனைவேளைக்குத் தினம்போய்தரிசித்து
வருகிறநாளையிலே மலைத்திருடரெல்லோரும்
கூட்டமிட்டுவளைதடியைக் கொண்டுபுறப்பட்டு
மதுரைக்கடைவிதி வந்துநுழைந்துகொண்டு
காசுபணம்நாணயத்தைக கனக்கவேகொள்ளையிட
பட்டணத்திலுள்ள பரிசனங்களெல்லோரும்
கோவென்றசத்தங் கூக்குரலுந்தானுமிட
நகரத்தலையாரி நாட்டமுடனேடிவந்து
வீரனுடனேசொன்னன் வீரனுமப்போது
இணக்கமுள்ளபொம்மியற்கு இதுசேதியைச்சொல்லி
குதிரைமேலேறி கூராயுதந்தரித்து
சேனைதளத்துடனே சிறப்பாகவேசென்று
வடக்குநல்லவாசலிலே வகையுடனேதானடந்தான்

நலமுடனே வீரனுமே நடந்தான்காணம்மானே
பொல்லாதவீரனுந்தான் போய்செய்யகோபித்து
பட்டாயுருவிக்கொண்டு பகட்டமுள்ளகள்ளரின்மேல்
பாய்ந்தான்குதித்தான் பதிவிருந்துநாணமைந்து
வீசினன்கள்ளர்களை வீராதிவீரனுந்தான்
முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இந்தப்படிக்கு யிறக்கடித்தான்வீரனுந்தான்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுகள்ளர்களும்
கொக்கரித்துசேனைகளும் கோடிபடைதான்வந்து
ஈட்டிக்கோலாலே யெறிந்தார்கள்வீரையன்மேல்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தான்பூண்டு
வாகுநல்லசமுதாடு வண்ணமுடன்றான்பூண்டு
யானையின்கூட்டத்தில் யாளிவந்துபாய்ந்தபோல்
பொல்லாதவீரன் பூர்த்தியாய்வீசலுற்றான்
கள்ளர்படைகளெல்லாம் கலங்கியேமெய்மறந்து
மெய்சோர்ந்துவிழுவாரும் விதிவசமேயென்பாரும்
ஆதிசிவனுக்கு அபயமென்றுவிழுவாரும்
ஈட்டிக்கோல்வைத்தபடி யிறந்துமடிவாரும்
அச்சமற்றநாட்டுக் கழிவுவந்துநேர்ந்ததென்றும்
இன்றுமுடிந்ததுகா ணெங்கள்பலமெல்லாம்
கள்ளரெல்லாம்புலம்பிக் கைசோர்ந்துவிழுந்தார்கள்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கள்ளர்படைசேனையெல்லாம் கருவறுத்தவீரன்தன்னை
தேவரெல்லாங்கண்டு சிறப்புடனேபார்த்திருந்தார்
நாலுதிசைமெச்சவீரன் நற்கொலுவில்தானிருந்து
வெள்ளானைமீதேறி வெற்றிகொண்டுவாரான்காண்
பஞ்சவர்னடால்விருது பக்கமேசூழ்ந்துவர
நாதசுரமேளம் நாட்டியப்பெண்ணுடிவர
மதுரைதிசைநோக்கி வாரார்காணம்மானே
கள்ளர்பற்றுநாட்டையெல்லாம் கடையாய்ப்பறக்கவிட்டு
சகலசம்பிரமத்துடன் சாமிமுத்துவீரையரும்
வருகிறாரென்று வகையுள்ளதூதர்களும்
திருமலைநாய்க்கர்கொலு செய்யுமண்டபத்தில்வந்து
சேதிதனையெல்லாஞ் செப்பலுற்றாரந்நேரம்
திருமலைநாய்க்கருஞ் செவிகொடுத்துத்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுத் தூதியரைக்கூப்பிட்டார்

தேனுக்ஷிமீனுக்ஷி செண்பகப்பூநாச்சியரே
பச்சைநிறத்தாளே பவளக்கொடியாளே
மாசிலாப்பத்தினியாள் வானத்தருந்துதியாள்
இந்தப்படிக்கு மியல்பானதாதியரும்
ஆயிரந்தாதியரை யன்பாயழைத்துவர
வெற்றிகொள்வீரருக்கு மேல்திருஷ்டிகழிக்க
ஆலாத்திசோடித்து அடைவுடனேதானடந்து
எதிர்கொண்டுபோவென் றெசமானனுப்பவேதான்
அழகுரத்தினம்பதித்த ஆலாத்திசோடித்து
ஆணிமுத்துவீரனுக்கு ஆலாத்திசுத்தினுர்கள்
அந்தமுள்ளவெள்ளையின்மே லாசைகொண்டுவீரையன்தான்
யானையைவிட்டிறங்கி யரண்மனைக்குள்ளேசென்று
திருமலைநாய்க்கனைச் சிறப்பாகவந்துகண்டார்
அந்தமல்லநாய்க்கனும் அன்புடனேவீரனுக்கு
கைலாகுதான்கொடுத்து களிப்புடனேவரவழைத்து
சிங்காதனத்தருகே சிறப்பாயிருக்கவைத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்புடனேதான்கொடுத்து
கள்ளர்பற்றுநாட்டை கருவறுத்துவந்தீரே
உம்மைப்போல்தேசத்தி லொருவரையுங்கண்டதில்லை
இளைப்போடிருக்கின்றீ ரேற்றமுள்ளவீரையனே
காலையிலேநாமே கலந்துவசனிப்போம்
என்றுசொல்லிநாய்க்கர் இசைவாகத்தானனுப்ப
நல்லதென்றுவீரையனும் நாய்க்கரைத்தான்றொழுது
அரண்மனைவாசல்விட்டு அடைவாகத்தானடந்து
யானைமேலேறி ஆணிமுத்துவீரையனும்
பொம்மியரண்மனைக்குப பொறுமையுடன்போய்ச்சேர்ந்து
கட்டுவர்க்கந்தானவிழ்த்துக் காரணனுமந்நேரம்
வெந்நீரினுலே வீரையனுப் ஸ்நானஞ்செய்து
கோதிமயிராற்றிக் கோணமல்சிக்கறுத்து
வாரிமுடித்து வகையுடனேவேஷ்டிகட்டி
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
உண்டுபசியாறி உத்தமனுர்வீரனுந்தான்
அடைக்காயும்வெற்றிலையு மன்புடனேதாமருந்தி
பஞ்சணைமெத்தையின்மேல் படுத்துயெழுந்தவுடன்
ஆலாத்திபெணகளிலே ஆனதொருவெளளையின்மேல்
தீராதவாசைகொண்டு சீக்கிரமாயெழுந்திருந்து

கட்டுவர்க்கந்தானுடுத்திக் கனகப்பணிபூண்டு
சீவிநல்லகொண்டையிட்டுச் சீக்கிரமாய்நடந்து
கோட்டையின்மேலேறிக் குதித்தான்காணம்மானே
வெள்ளையம்மாள்தன்விடுதி வேகமுடனேக்கியவன்
அங்கையற்கண்ணம்ம னடிபணியும்வெள்ளையம்மாள்
மீனுக்ஷிசந்நதிக்கு முன்பாகமாளிகையில்
தூங்குமஞ்சக்கட்டில் துலங்கவலங்கரித்து
பஞ்சணைமெத்தையின்மேற் பைங்கிளியாள்வெள்ளையரும்
நினைவுதெரியாமல் நித்திரைசெய்கையிலே
உல்லாசமாக உயிலழகர்தென்மதுரை
விதிப்பயனைஎண்ணுமல் மெல்லியர்மேலாசைகொண்டு
மதிலேறித்தான்குதித்து மண்டபமுந்தான்கடந்து
பத்தினியாள்பள்ளிகொண்ட பாரயிடந்தன்னில்
இருந்துநினைத்தான் எண்ணமுற்றகாளையவன்
தட்டியெழுப்பினுன் தையலெழுந்திருந்து
கூவென்ருல்வெள்ளையருங் கூடிடுவார்மாதரெல்லாம்
என்றுபலவாரு யெண்ணிஏக்கமுற்று
முருகன்துணையென்று மூர்க்கமுள்ளவீரனுமே
தோளின்மீதிருந்த துப்பட்டிகீழ்பரப்பி
மெல்லஅசையாமல் மெல்லியரைத்தூக்கிவைத்து
கட்டியிருக்க கைலாகுகொண்டுதூக்கி
மாளிகையும்விட்டு மண்டபத்தைதான்கடந்து
தானிருக்குங்கோட்டையிற் ருண்டிக்குதிக்கையிலே
வேஷக்காரகள்ளனென்றி வீரையனைத்தான்பிடித்து
ஆரென்றுசொல்லி அதட்டியவர்தான்கேட்டு
பத்தினியைக்கொண்டுவந்த பாவம்பலித்ததென்று
ஏங்கிமுகம்வாடி என்னசொல்லப்போருமென்று
ஒன்றுஞ்சொல்லாமல் ஊமைபோல்தானிருக்க
திருமலைநாய்க்கருக்கு சேதிசொல்லிவாருமென்று
அனுப்பிவைத்தார்தூதுவனை ஆனதொருசேவகனும்
தூதுவருமப்போது துருசாகத்தாேடி
ஆசாரவாசல்நின்று அடைவுடனே சொல்லலுற்ருர்
திருமலைநாய்க்கர் சேதிதனைத்தான்கேட்டு
கள்ளனை இங்குகாணக் கொண்டுவாவென்றுசொல்ல
கட்டளையிட்டபடி காவலர்களோடிவந்து
கள்ளனெனும்வீரையனும் கட்டியமூட்டையுடன்

நாய்க்கர்முன்கொண்டுவந்து நடுநீதிகேட்கலுற்றார்
திருமலைநாய்க்கருந்தான் திருடன்மூட்டையைத்திறந்து
பார்க்கும்போதங்கே பாவைவெள்ளம்மையென்று
கண்டவனைத்தானிறுத்தி கள்ளனைக்குற்றத்தினால்
கானகத்திற்கொண்டுபோய் கைகாலைவாங்குமென்றார்
காவலருங்கள்ளனைத்தான் காட்டில்கொண்டுபோயவனை
கைகாலைவெட்டிவிட்டுக் காவலாள்வந்துவிட்டார்
வீரனுந்தன்னுடைய விதிதனைத்தானினைந்து
ஆதிசிவன்மாயவற்கு அபயமென்றுதான்சொல்லி
எண்ணுதுமெண்ணி இருக்குமந்தவேளையிலே
அப்போதுவெள்ளையரும் அசந்துநித்திரைசெய்து
பார்க்கவேவீரன் பக்குவமாய்நின்றிருக்க
கண்டவுடனேயோசித்து காரிழையுஞ்சொல்லுகிறாள்
நானேபதிவிரதை நன்மையறியாமல்
தொட்டுயெனையெடுத்து தூக்கியேவந்ததினால்
இனியெனக்குநீபுருஷன் என்பதற்கோரையமில்லை
கோவேயினிவுந்தன் கூடவேநான்வருவேன்
உன்துக்கம்என்துக்கம் ஒன்றல்லவேறில்லை
ஒற்றுமையாகி உயிரைவிடுவேன்காண்
என்றுதிடமாக இயம்பினாள்வெள்ளையரும்
இவள்சொல்லுவீசொற்கேட்டு இருந்தவர்களப்போது
ஆணிமுத்துவீரனென்று அனைவோருந்தாமறிந்து
உம்மைஇன்னாரென்று உண்மையறியாமல்
கைகாலறுத்துவிட்ட காரணத்துக்கென்செய்வோம்
என்றுசொல்லிசேவகர்கள் இணங்கிவணங்கலுற்றார்
காலில்விழுந்து கதறியழுகலுற்றார்
அழுதசத்தந்தான்கேட்டு ஆரணங்குபொம்மியரும்
அவரோஇவரோ அறிந்துவருவோமென்று
அன்னம்போல்நடந்து அருகில்வந்துதானின்று
வீரையனைத்தான்பார்த்து விம்மிவிம்மித்தானழுது
பாதகாநானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
கால்கையறுப்புண்டிருக்கக் காணவோவந்தேனான்
எழுத்தையறியாமல் எண்ணினேன்கோடிசிந்தை
ஆண்டவனேயுந்தனுக்கு அசடுவந்தவாரேது
மன்னவனேயுந்தனேயும் வழிமறிப்பாருண்டோதான்
என்றுசொல்லிபொம்மியரும் ஏங்கிவிசனமுற்றாள்



புருஷனும்வாய்திறந்து பொம்மிக்குச்சொல்லலுற்றுன்
ஆதிசிவன்பிர்மா அன்புள்ளமாயனுமே
கூட்டியெழுதினதைக் குறைப்பாரோபெண்ணரசே
எழுத்தையழிக்க எவரால்முடியுந்தான்
சூரியகுலத்துதித்து தோற்றமுடன்வீற்றிருந்தேன்
மாறுபடாவம்சத்தில் வந்துபிறந்தேன்காண்
பொம்மியரேநானும் பூமியிலிறப்பதில்லை
மீனுக்ஷிபொற்பதத்தை விழிப்பமுடன்சேர்வதன்றி
அரைநொடியும்நானிருக்க அதிகாரமில்லையடி
ஆரணங்குபொம்மி அருஞ்சேதிதான்கேட்டு
மன்னவனேயுன்னைவிட்டு மண்மேலிருப்பதில்லை
கூடவருவேன்காண் வெள்ளைகொண்டராஜாவே
என்றுசொல்லிபொம்மி இதக்கமாய்தானடந்து
வைகைநதியில் வனமயிலாள்ஸ்நானம்பண்ணி
கூந்தலுதறியங்கே கோடாலிமுடிதான்போட்டு
கூறையுடுத்திக் கோலப்பணிபூண்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
எலுமிச்சங்காய்கையில் ஏந்திக்கொண்டுதானடந்து
அம்மாமீனுக்ஷி அடியாளும்வாரேனம்மா
சிவசிவாசொக்கலிங்கர் சீர்பாதங்காணவென்று
பயணம்பயணமென்று பைங்கிளியுந்தானடந்து
வீரருக்குமிட மேவியேதான்சேர்ந்தாள்
அந்தவிதமாயிருக்கும் அவ்வேளைதனிலே
வெள்ளையரும்பார்த்து விதவிதமாய்த்தானினைந்து
என்னெருபெண்ணுலே இடியேதுவீரனுக்கு
சொல்லியபொல்லாங்கு சுத்தமாய்வந்ததினுல்
திருமலைநாய்க்கருக்குச் சேதிதனைசொல்வோமென்று
வாடியமனதுடனே வந்துநின்றுசொல்லவேதான்
திருமலைநாய்க்கர் சேதிதனைக்கேட்டு
அருமையுள்ளபிள்ளைக்கு அசடுவந்துநேர்ந்ததென்று
ஆசாரவாசல்மட்டும் அலறியேதான்புரண்டு
ஆடைகளைய ஆபரணந்தான்புரள
ஓட்டமாயோடிவந்து உத்தமனைத்தான்பார்த்து
அப்பாமகனேயென்று அலறியேதானழுது
வெள்ளையகரவேணுமென்று விரும்பினைக்கேட்டால்
கோதைமயிலைக் கூட்டிவந்துதாரேனே

எந்தனது பெண்ணை இஷ்டமுடன் கேட்டாலும்
கலியாணந்தான் முடித்துக் கண்ணுலேபாரேனே
நான் தாண்டாவீரனென்று நலமுடனே சொல்லாமல்
பேசாமலிருந்ததினல் பிழைஏமோசம்வந்ததுகாண்
என்றுசொல்லிநாய்க்கர் ஏங்கிமுகம்வாடி
மீனுக்ஷிசந்நதிக்கு விருப்பமுடன் சென்றேகி
உத்தரவுதானகேட்டு ஒருநொடியில்நான்வருவேன்
என்றுசொல்லியப்போது இசைவுடனே போனர்கள்
சொக்கர்திருவாலயத்தில் துருசாகப்போய்புகுந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டான்
திரிபுரமெரித்தவர்தன் தேவிபரமேஸ்வரியே
வீரனுக்குவந்த விதிப்பயனைத்தீருமம்மா
கைகால்வளர்ந்து கடுகவெழுந்திருக்க
வேண்டுமம்மாதாயே வேதாந்தநாயகியே
என்றுசொல்லநாய்க்கர் ஈஸ்வரியுந்தான் பார்த்து
கால்கையுந்தான்வளரக் கட்டளையுமிட்டாள்காண்
திருமலைநாய்க்கருந் திரும்பிவருவதற்குள்
மீனுக்ஷிகிருபையினல் வீரனுக்குமுன்போல
கால்கையுந்தான்வளர்ந்து கடுகவெழுந்திருந்து
திருமலைநாய்க்கர்முன்னே சீக்கிரமாயோடிவந்து
வாருமையாராஜாவே வார்த்தைசொல்லக்கேளுமையா
மாறுபடாவம்சத்தில் வந்துபிறந்தேன்காண்
மாறுபடாமேனியிலே மாறுபடவாச்சுதுகாண்
பூவையாலென்னுயிர் பொன்னுலகம்போகுதையா
அன்றுயெனக்கு ஆயனெழுத்துப்படியே
வாய்த்ததென்றுவீரன் வண்மையுடனிருக்க
காதினுற்கேட்டு கண்ணீர்விட்டார்நாய்க்கரும்
வாழ்வுபெருஞ்செல்வம் மாயமிதுராஜாவே
நீரின்மேற்குமிழி நிலைமையற்றவாழ்க்கையிது
என்றுயிருந்தாலும் இறப்பதுநிச்சயந்தான்
சலித்துநீர்தானழுக தருமமோராஜாவே
என்றுசொல்லிவீரனுமே இவ்வண்ணந்தேறிநின்றுன்
பெண்களிருவருமே பிரியமாய்த்தீக்குதிக்க
நற்சவுக்கமாக நலமானதீச்குழியை
உண்டுபண்ணிவைக்கநீ ருத்தாரஞ்சொல்லுமையா
திருமலைநாய்க்கருஞ் சேதியிதுவறிந்து

வைவகைக்குத்தான்போய் மாந்தோப்புக்குட்புகுந்து
தீக்குழி ஆன செம்மையுள்ளதாவதனை
கண்டுகுறித்து கடுகவேவெட்டிவைத்து
சந்தனக்கட்டைக்கொண்டு சதுராகத்தான்பரப்பி
தீக்குழியைச்சுற்றி ஜெயமங்களஞ்சொல்லி
வேதியரைத்தானழைத்து விதியாகச்செய்யென்றார்
ஆலாத்திசுத்தும் பெண்ணுனதொருவெள்ளையரும்
பொன்னுனத்ருமேனி பொம்மியருங்கூடவேதான்
ஏற்றமுள்ளவீரனுமே இருவரையுந்தானழைத்து
அன்னதானம்சொர்னதானம் அன்பாகச்செய்வித்து
கோதானம்பூதானம் கோதையரால்செய்வித்து
காரிகைநீங்களிருவர் கைலாயஞ்சேருமென்றார்
காதிலுல்கேட்டுக் கன்னிகள்தானுமப்போ
பூரித்துமேனி பொங்கியிருவருந்தான்
பூண்டிருந்தஆபரணம் பொரிபொரியாய்தோன்றெடுக்க
சந்தோஷமாயிருவர் சாமிமுத்துபாதத்தில்
அடைவுடனேதெண்டனிட்டு அன்பாயிருபேரும்
இருவருந்தெய்வத்தை இதமாகவேதொழுது
சுத்திவந்துதீக்குழியைச் சுத்தமனத்துடனே
சந்தோஷமாகவேதான் சலியாமலேகுதித்தார்
தேவாதிதேவரெல்லாம் திட்டமுடனேபார்த்து
ஆகாயகந்தருவர் அனைவரும்பூச்சொரிய
தேவதுந்துமிதானுஞ் சீக்கிரமாய்த்தான்முழங்க
தீக்குழியைவீரனுமே சீக்கிரமாய்த்தான்மூடி
சடங்குகளெல்லாம் சதிராகத்தான்முடித்து
ஸ்நானமதுசெய்தபின்பு தயவாய்ப்பிராணர்க்கு
வஸ்திரங்காசுபணம் வண்மையாய்த்தான்கொடுத்து
பொற்றாமரைக்குளத்தில் பொறுமையுடன்போயிறங்கி
கோடாலிமுடியவிழ்த்து குதித்துமேஸ்நானஞ்செய்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
சந்தனம்புனுகுஞ் சவ்வாதுடன்தானணிந்து
பூசித்திருமேனியெங்கும் பொங்கமுடன்கதம்பம்
மிதியடியும்பூண்டுமே ருத்திராக்ஷந்தாமணிந்து
என்தாயேமீனாக்ஷி ஈஸ்வரியேயென்றுசொல்லி
காளமுத்துவீரனுமே கடுகெனவேதான்வந்து
ஆதிசிவனேயென்று அன்புடனேதான்வந்து

மீனாக்ஷிசந்நிதிமுன் வீரையனும்வந்துநின்று
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திருமலைநாயக்கர்தனை திரும்பிமுகம்பார்த்து
வாருமென்றுசொல்லி வண்மையுடன்தானழைத்து
மீனாக்ஷிபொற்பாதம் இடமுடனேசேர்வதற்கு
உத்தரவுசொல்லுமென்று ஒருவார்த்தைதான்கேட்டு
மனதுக்குகந்தபடி மகிழ்ச்சியுடன்செய்என்றார்
போய்வாரேனென்றுசொல்லிப் புகலறிய வீரனுமே
பார்வதியின்பேரில் பதினெட்டாம்படியேடி
என்தாயேமீனாக்ஷி எனக்கென்னபுத்தியென்றான்
முந்தியமாலை முதற்பூஜையுன்னுதுகாண்
கம்பத்தடியில் காத்திருந்துபூசைகொள்வாய்
என்றுசொல்லிமீனாக்ஷி ஏற்றவரங்கொடுத்தாள்
காலைமுத்துவீரனுந்தான் கம்பத்தடியில்வந்து
கன்றநுக்குஞ்சூரிதனைக் கையிலேதான்வாங்கி
பார்வதியேயுந்தன் பாதங்கெதியென்று
கடிகைத்தவறாமல் கழுத்தையறுத்துக்கொண்டான்
வீரன்சிரசுதான் மீனாக்ஷி பாதம்விழ
அல்லவருங்கூடி ஆச்சரியப்பட்டார்கள்
வீற்றிருந்தசேனையுடன் வேந்தன்திருமலையை
மீனாக்ஷியம்மனப்போ வீடுதிபோய்சேருமென்றாள்
அப்படியேஎல்லோரும் அரண்மனைப்போய்ச்சேர்ந்தார்கள்
அன்றுமுதல்மூன்றுநா ளாணிமுத்துவீரனுக்கு
பூஜைநமஸ்காரம் புசிப்புமேதானுமில்லை
பார்த்துநல்லவீரனுமே பதறியேகோபங்கொண்டு
இப்படிக்குத்தானிருந்தா லேற்காதுகலியுகத்தில்
என்றுநினைத்து யெழுந்திருந்தநேரம்
மீனாக்ஷிசந்நிதிபோய் விதியுடனேதெண்டனிட்டு
என்தாயேமீனாக்ஷி யெனக்குபுத்திசொன்னபடி
பட்டணத்திலுள்ளோரும் பராமரிப்பதில்லையெனை
இதுபார்த்துநீயிருந்தா லென்வயிறுபசியாதோ
ஆதலால்பட்டணத்தி லமர்ந்தமனிதர்களை
கொள்ளைகொள்ளையெனக்கு கூறுவையேயானுக்கால்
காவடியுந்தோளிலேந்திக் கம்பத்தடிவருவேனம்மா
என்றுதான்சொல்ல யீஸ்வரியுந்தான்கேட்டு
கம்பத்தடிவீரா காரியத்தைசொல்லுகிறேன்

துணிவுகூறும்வீரா துள்ளாதேயிந்நேரம்
திருமலைநாய்க்கர்தான் செம்பொன்மணிமாளிகையில்
உள்ளேநுழைந்து வுபாயமொன்றைசெய்வாய்நீ
அவ்விடத்திலுள்ளவரை அதட்டிமிகச்சொற்பனத்தை
பண்ணிவந்தபூஜை பாங்குடனேவாங்குமென்ருள்
என்தாயேமீனாக்ஷி யிதுபோதுமென்றுசொல்லி
திருமலைநாய்க்காதன் செம்பொன்மணிமாளிகையில்
ஆக்கிரமித்துப்போய் அதட்டிதொடைதட்டி
நஞ்சுதின்றுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
பட்டணத்திலுள்ள பாரமுனிகளெல்லாம்
வண்டத்துரைவீரன் வருகின்றவழிதனிலே
எதிரேவரப்பயந்து எல்லோருதாமொளிப்பார்
மன்னனரண்மனையில் மதிலேறிவீரன்போய்
சப்பிரகூடமஞ்சத்தில் தனித்துச்சயனஞ்செய்யும்
திருமலைநாய்க்கர்தனைச் செவ்வையாய்தான்பார்த்து
தோட்டிபோலுருக்காட்டி சொர்ப்பனஞ்சாதித்தான்
வேர்த்துவிடவிடத்து விழித்துமெள்ளத்தான்பார்த்து
பதறியெழுந்திருந்து பைங்கிளியைத்தானெழுப்பி
காணுதசொர்ப்பனந்தான் கண்டுபயந்தேனடி
என்றுசொல்லக்கேட்டு யியற்கையுள்ளபெண்ஜாதி
ஏதுநடந்தாலும் யீஸ்வரியாள்மீனாக்ஷி
பொற்பாதம்துணையொழிய புகலுவற்கேதுமில்லை
மன்னவர்க்குத்தேறுதலை மங்கையருந்தானுரைத்தாள்
சொல்லுகிறவார்த்தையெல்லாம் துரைவீரன்கேட்டிருந்து
ஆகட்டுமென்று அரண்மனையைவிட்டுமெள்ள
கோட்டைதலைவாசல் குதிரைலாயம்புகுந்து
பஞ்சகலியாணி பட்டத்துகுதிரையும்
அறுத்தாரரைநொடியி லாங்காரங்கொண்டவன்காண்
மாட்டுமந்தையிற்புகுந்து மகாபூஜைகொண்டவன்காண்
உக்கிரமுள்ளசேவகர்கள் ஒருநூறுதலையாரி
படுத்திருக்குஞ்சாவடியில் பாங்குடனேபோய்புகுந்து
சுழற்றியெறிந்தான்காண் சுற்றுமதிற்கப்பாலே
ஆனைகட்டுமலாயத்தில் அஞ்சாமல்வீரன்போய்
மண்டியிட்டுவீரன் மதயானையையடக்கி
கன்னிகைப்பெண்கள் கண்ணுறங்கும்வேளையிலே
கன்னியர்களருகில்வந்து காலைமுத்துவீரனுந்தான்

அபயமென்றரத்தம் அண்டமெல்லாந்தானதிர
காரணனுந்தென்மதுரை கம்பத்தடியில்வந்தான்
அன்றிரவுசென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
கச்சித்திருமலையர் காலையிலெழுந்திருந்து
கால்கைகள்சுத்திசெய்து கனத்தபணிபூண்டு
கட்டியங்கள்கூறக் கவரிதனைவீச
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
மந்திரிகள்சேனை மகிழ்ந்துமன்னர்கூட்டமுடன்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
சொக்கரதுசந்நிதிக்கு துருசாகவோடிவந்து
அங்கையற்கண்மீனாக்ஷி அம்மனுடசந்நிதியில்
மீனாக்ஷிமுன்பாக வேந்தன்விரைவில்வந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
என்தாயேமீனாக்ஷி யீஸ்வரியேயிப்போது
காணாதசொர்ப்பனங்கள் கண்டவிதங்களென்ன
அதிசயங்கள்வந்தவகை அடியேனறிவதற்கு
வழியாயுரைக்கவேணும் வாய்மையுள்ளயீஸ்வரியே
பார்வேந்தனப்போது பாதத்தில்தான்விழுந்தான்
வாழ்மதுரைசொக்கரும் மதுரைமீனாக்ஷியரும்
அப்பாமகனே அதிசயங்கள்வந்தவகை
காரணமாய்வந்தைக் கம்பத்தடிவீரன்
பட்டபாடெல்லாம் பாரோர்நினைக்கவில்லை
பொங்திபசியெத்த பொல்லாதவீரனுக்கு
உண்டானதிறலே ஓடிவந்தானுன்மனைக்கு
வீரன்குறையொழிய வேறொன்றுந்தானுமில்லை
பட்டணமெங்கும் பலதெருவார்பூஜைசெய்ய
கம்பத்தடியில்வந்து காணிக்கைதானும்வைத்து
சந்துக்குசந்து தனிபூஜைதானுமிட்டு
இந்தப்படிக்கு யிஷ்டமுடனேதொழுதால்
வீரன்குறைதீர்ந்து வெகுவாய்மனங்களிப்பான்
என்றுசொல்லியீஸ்வரியும் யிதமுடனேவாக்குரைக்க
திருமலைநாய்க்கர் சீக்கிரத்தில்தானெழுந்து
கம்பத்தடியில்வந்து காலைமுத்துவீரனுக்கு
ஐந்நூறுபொன்கொண்டு அபிஷேகம்பண்ணிவைத்து
மண்டபமுங்கட்டிவைத்து மகாபூஜையுங்கொடுத்து
தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து

இளநீருஞ்செங்கரும்பு மிதமானபால்பழமும்
வீதிக்குவீதி வேணமட்டும்பூஜையிட
சந்துக்குச்சந்து தனிபூஜைதானுமிட
எல்லோரறிய யெங்கும்பறையறைய
மதுரையிலுள்ளோர்கள் வகையுடனேதானுமிப்போ
வீதிக்குவீதி வேணபடிபூஜையிட்டார்
வீரனிடத்திற்கு வேந்தன்வந்தேதொழுது
முப்பழமுமிட்டு முன்பூஜைபோடுகிறேன்
வந்தவினைகளெல்லாம் மாளவேசெய்யுமையா
என்றுசொல்லிநாய்க்கரும் யிதமாகக்கைதொழுதார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கோட்டைக்குறிக்காரன் குமரமுத்துநாய்க்கன்மேல்
ஆவேசம்வந்து அவன்பேரில்கொக்கரித்து
திருவாய்மலர்ந்து செப்பலுற்றானந்நேரம்
என்னைநினைக்காம லிதுவரையிலேயிருந்தீர்
பொருந்திபசியாறி பூரித்தேனிப்போது
என்பெயரைச்சொல்லி யீய்ந்தால்விபூதிதன்னை
வந்தபிணிநோயும் மானிடர்க்குத்தீருமப்பா
என்றுதெளிவா யிதமாகத்தான்சொல்லி
முன்னிருந்தசேனையெல்லாம் முழுதுமெழுந்திருக்கச்
செய்துமலையேறி சென்றுதேயாவேசம்
திருமலைநாய்க்கர் திருநீறுந்தான்கொண்டு
அரண்மனைக்குச்சென்று ஆரிழைக்குத்தான்கொடுத்து
ஆண்பிள்ளைபிறந்தால் ஆணிமுத்துவீரனென்று
இடவேணும்பேரென்று யியம்பினார்நாய்க்கரும்
கும்பிட்டுவாங்கி குயில்மொழியாள்தான்தரித்தாள்
மூன்றுமாதஞ்சென்று முருக்கம்பூமேனியரும்
புத்திரனுண்டானாள் பொற்கொடியுமப்போது
பத்தானமாதத்தில் பாலனையும்பெற்றெடுத்தாள்
பிள்ளைக்குவீரன் பேர்வைத்துஅந்நேரம்
ஐந்நூறுவண்டியில் ஆனதொருசர்க்கரையும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
ஒன்பதுகாதவழி யூர்தோறுஞ்சர்க்கரைகள்
வீதிக்குவீதி வேணமட்டும்வழங்கிவர
வேதியர்க்கெல்லாம் வெகுவாய்தானங்கொடுத்தார்
சொக்கருடன்மீனாக்ஷி துலங்குமதிற்கோயில்சென்று

முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
அறுபதுபொன்னெடுத் தபிஷேகம்பண்ணிவைத்து
அரண்மனைக்குவந்து அரசன்திருமலையும்
வீரனுக்குப்பூஜை விதமுடனேசெய்து
பூதலத்திலுள்ளவர்கள் பூஜைகொடுப்பார்கள்
உன்காவலுன்னடிமை வுண்மையுள்ளவீரையனே
தங்காத்துக்கொண்டு தயவாகக்காருமையா
ஐயாவேவீரனே அனைவரையுங்காத்திடுவாய்
அவரவர்பங்கில் அனுதினமும்நீயிருந்து
என்னையுங்காத்து இரட்சிக்கவேணுமையா
என்றுதிருமலைய னின்பமுடனேதொழுது
வாழ்மதுரைசொக்கர் மதுரைமீக்ஷியம்மாள்
தாங்கள்கிருபையினால் தாரணியோர்வாழ்ந்திருக்க
நாடுதழைக்க நல்லமழைதான்பொழிய

வாழி

தேவர்களும்மிகவாழி தேசத்தோர்கள்வாழி
அங்கயறகண்மீனாக்ஷி அம்மையுந்தான்வாழி
பாடினோர்வாழி படித்தோருந்தான்வாழி
கேட்டோர்கிளைதழைத்து கீர்த்தியுடனேவாழி
மாடுகன்றுமக்கள் மருமக்கள்தான்வாழி
வீரனைப்பூசிக்கும் வேல்வீரர்தான்வாழி
இக்கதையையச்சி லியற்றிவோாதானவாழி
வாகீஸ்வரிஅச்சகம் செழித்தெந்நாளும்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனர்

**மதுரைவீரசுவாமி கதை முற்றிற்று.**

வாகீஸ்வரி அச்சகம், சென்னை-1 (1976)

# மாயாஜால மர்மங்கள்

[நான்கு பாகங்கள் அடங்கியது]

## விலை ரூபாய். 4-50.

இந்நூலில் வேண்டிய அநேக வித்தைகளும், மோடி வித்தைகளின் இரகசியங்களும், மற்றும் யாவரும் பிரமிக்கத் தக்க பல ஜாலங்கள், பல சித்தர்கள் வியாபமும் வகை வகையும், அஞ்சன மைகளும், பிம்பவித்தை, சொக்குப்பொடிகள் குளிகை, அஷ்டகர்ம கருவை, மற்றும் முனிவர்கள், வாலை, ஜாலக்காரன், குட்டிச்சாத்தான், பக்ஷிணி, அநுமான், வாடன், பகவதி, இருளாட்டேரி வசியங்களும், அதற்கு வேண்டிய மந்திரங்களும் மற்றும் கோள்கள் யந்திர குபேர யந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதிபிடித்தல், வேப்பிலையடித்தல், பேய்பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சதிபதிகள் பிரியா திருத்தல், சமெருக்கை முறித்தல், மற்றும் பாம்பு, தேள், நாய், பூனை, எலி இவை போன்ற பல விஷஜெந்துக்களின் கடி விஷங்களைபோக்குதல், இன்னும் ஜாலக்காரரின் ஜெகஜால வித்தைகள், முள்ளின்மீது படுத்தல், நெருப்பை கையிலள்ளுதல், நெருப்பு மிதித்தல், நெருப்புசட்டி ஏந்தும் குதம், நெருப்பை மடியில் கட்டுதல், ஜலத்தின்மீது படுத்தல் ஜலத்திலடங்குதல், வயிற்றில் கட்டிபாய்ச்சுதல், மோடியின் மூலம், ஜாலாகாசவித்தைகள், விளக்குகளை அடக்கி எழுதல் உடுக்கையை உடைத்தல், கன்றுகுட்டியின் தலை சுற்றுதல், கண்ணுவிரதமிருத்தல், சுடுமண்ணை மாட்டுக்கை யாக்குதல், ஆச்சரியமாக்குதல், குளத்திருள் சென்ற விதம் எழுதல், பக்ஷயம் இலைத்தல், பாகுசோம்பு பாட்டு பாடுதல், இதுபோன்ற எண்ணிலடங்காத ஏராளமான ஜால வித்தைகள் இதில் அடங்கியுள்ளது

எமது விலாசம் :—

ஆர். ஜீ. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
மின்ட் போஸ்ட் சென்னை-1.